When only
The best is
Good Enough

Buy
Solide Pumps

பங்கங்கள் எட்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை
ரூ 2/50

தரமானதே சிறந்தது
என்றால்

சொலிட்
பம்பையே வாங்குங்கள்

கடர்: 4 சுக்கில ஞூ ஆடி மீ 30 உ திங்கட்கிழமை ஹிஜ்ரி 1409 முஹறம் பிறை 11 ( 14 - 08 - 1989 ) UTHAYAN - A LIVELY NATIONAL TAMIL DAILY கதிர்:- 216

## அமைதிப்படை விலகல் விவகாரம்:

# இரு நாடுகளுக்கு இடையிலும் இணக்க நிலை உருவாகியுள்ளது!

### அடுத்த கட்டப் பேச்சும் நடக்கும்!! அமைச்சர் தொண்டா தந்த தகவல்

கொழும்பு ஆகஸ்ட் 14

அமைதிப்படை விலகல் விவகாரம் தொடர்பாக இலங்கை, இந்தியா ஆகிய இரு நாடுகளுக்கும் இடையில் இணக்க நிலை ஒன்று உருவாகியுள்ளது. இந்த நிலையை யாரும் சிக்கலாக்கி விடக்கூடாது.

விரைவில் இருநாடுகளுக்கும் இடையில் அடுத்த கட்டப் பேச்சுக்கள் நடைபெறக்கூடிய சூழ்நிலையும் தோன்றியுள்ளது.

- புடைவை கிராமியத் தொழில்துறை அபிவிருத்தி அமைச்சர் திரு. எஸ். தொண்டமான் இப்படித் தெரிவித்தார்.

அமைதிப்படை விலகல் விவகாரம் சம்பந்தமாகக் கடந்த வெள்ளிக்கிழமை மாலை விசேட அமைச்சரவைக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் இந்த விடயம் தொடர்பாக புதுடில்லியில் தெரிவிக்கப்பட்ட ஆலோசனைகள் பற்றி விரிவாக ஆராயப்பட்டது.

இந்த அமைச்சரவைக் கூட்டத்தில் பங்குபற்றியபின்னர், அடுத்தநாள் காலையில் — நேற்று முன்தினம் காலையில் — கருத்து வெளியிடுகையிலேயே அமைச்சர் திரு. தொண்டமான் இப்படித் தெரிவித்தார்.

திரு. தொண்டமான் மேலும் கூறியதாவது:-

**மோதாமல் இருக்கவே விருப்பம்**

இந்தியாவின் யோசனைகள் குறித்து கருத்துக் கூறிய அனைத்து அரசியல் கட்சித் தலைவர்களும் எம். பிக்களும்

( 8ஆம் பக்கம் பார்க்க )

### புதுடில்லியோசனைகளுக்கு திருத்தம்; சிரேஷ்ட அமைச்சர்கள் ஆலோசனை

கொழும்பு: ஆக. 14

அமைதிப்படை விலகல் விவகாரத்திற்கு இந்தியா தெரிவித்த புதுடில்லி யோசனைகளுக்கு சில திருத்தங்கள் கொண்டு வருவதன் மூலம் சமரசத் தீர்வு காணலாம்:

- இப்படி அமைச்சரவைக் கூட்டத்தில் சிரேஷ்ட அமைச்சர்கள் சிலர் ஆலோசனை தெரிவித்திருக்கின்றனர்.

புதுடில்லி யோசனைகள்பற்றி பரிசிலனை செய்வதற்காக கடந்த வெள்ளிக்கிழமை கூட்டப்பட்ட விசேட அமைச்சரவைக் கூட்டத்திலேயே இந்த ஆலோசனை தெரிவிக்கப்பட்டது

அமைதிப்படை விலகல், விவகாரத்தை சுமுகமாகப் பேசித் தீர்மானிப்பதே சிறந்தது என்றும்—

இந்தியாவின் யோசனைகளை சில திருத்தங்களை கொண்டு வந்து சமரசத் தீர்வு காணலாம் என்றும் அமைச்சர் தொண்டமான், காமினி திஸநாயக்கா, லலித் அத்துலத் முதலி, ரஞ்சன் விஜேரத்தின ஆகியோர் அமைச்சரவைக் கூட்டத்தில் கருத்து வெளியிட்டதாக தெரியவருகிறது:

வேறுசில அமைச்சர்கள், இலங்கையின் தன்னுதிக்கம், இறைமை, ஒருமைப்பாடு ஆகியவற்றுக்கு ஆபத்து ஏற்படாத வகையில் படை விலகல் விவகாரத்துக்கு தீர்வு காணவேண்டும் என்று வலியுறுத்தியதாகவும் தெரிய வந்தது.

( 8ஆம் பக்கம் பார்க்க )

### இந்தியப்படை விலகும் காலம் வந்து விட்டது என்கிறார் ஜே.ஆர்.

#### ஜனாதிபதி பிரேமாவின் கருத்துக்கு ஆதரவு

கொழும்பு. ஆக. 14

★ "இந்திய அமைதிப் படை விலகல் பற்றி ஜனாதிபதி பிரேமதாஸா தெரிவித்த கருத்தை நான் வரவேற்கிறேன்;

★ இந்தியத் துருப்புக்கள் வெளியேற வேண்டும் என்று ஜனாதிபதி பிரேமதாஸா கூறியிருந்தால் இந்தியத் துருப்புக்கள் வெளியேறத்தான் வேண்டும்".

★ அமைதிப் படை விலகலுடன் அதிகாரப் பரவலாக்கல் சம்பந்தப்பட்டிருக்கவில்லை. இந்தியா அதன் துருப்புக்களை வாபஸ் பெற்றுக்கொள்ளும் காலம் வந்துவிட்டது.

—இப்படி முன்னாள் ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன கருத்துத் தெரிவித்திருக்கிறார்.

"இந்தியா ருடே" சஞ்சிகைக்கு அளித்துள்ள பேட்டியிலேயே திரு. ஜெயவர்த்தன இப்படித் தெரிவித்திருக்கிறார்; அப்பேட்டியில் அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது:-

தமிழ்த் தீவிரவாதிகளுக்கு எதிரான நடவடிக்கைகளை மேற்கொள்வதிலும் —

வட பகுதியில் உள்ள மக்களுக்குப் பொருட்களை அனுப்புவதிலும் இலங்கை அரசு கஷ்டங்களை எதிர்நோக்கிய வேளையில் —

இந்தியாவுடன் உடன்படிக்கை ஒன்றைச் செய்து கொள்ளும் யோசனை தெரிவிக்கப்பட்டது;

இந்த யோசனையை நான் மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொண்டேன். அப்போது இருந்த

( 8ஆம் பக்கம் பார்க்க )

### அரச அதிபர்கள் மாநாடு இன்று

யாழ்ப்பாணம், ஆக. 14

அரசாங்க அதிபர்களின் மாநாடு ஒன்று இன்று கொழும்பில் நடைபெற இருக்கிறது. சகல அரசாங்க அதிபர்களும் இம்மாநாட்டுக்கு அழைக்கப் பட்டுள்ளனர். (ஒ-13)

### சுபநேரம்

[14 - 8 - 1989]

ஆடி 30 — திங்கட்கிழமை
நக்ஷத்திரம்: பூராடம்
சுபநேரம்:
12-05 முதல் 01-35 வரை
ராகுகாலம்:
07-35 முதல் 09-05 வரை
இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்;
பிரதோஷ விரதம்

#### பயிலுநர் ஆசிரியர் தெரிவு:

### நேர்முகப் பரீட்சைகள் 20 ஆம் திகதி ஆரம்பம்

25ஆயிரம் பயிலுநர் ஆசிரியர் பதவிக்கான நேர்முகப் பரீட்சைகள் யாழ் மாவட்டத்தில் எதிர்வரும் 20ஆம் திகதி முதல் நடைபெற இருக்கின்றன:

நேர்முகப் பரீட்சைக்கு சமுகமளிக்க வேண்டியவர்களைப் பற்றிய விவரங்கள் எதிர்வரும் 18ஆம் திகதி சகல கோட்டக்கல்வி அலுவலகங்களிலும் வைக்கப்படும்; தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு அன்று கடிதங்கள் வழங்கப்படும்;

திருமலை மாகாணக் கல்விப் பணிப்பாளருக்கு அனுப்பப்பட்ட சுமார் மூவாயிரம் விண்ணப்பங்கள் நேற்று யாழ் கல்வித் திணைக்களத்துக்கு எடுத்து வரப்பட்டன: அவ்விண்ணப் பங்களைப் பரிசிலனை செய்யும் வேலைகள் நேற்றே ஆரம்பமாகின.

இவ்விண்ணப்பங்கள் வந்து சேர்வதில் ஏற்பட்ட தாமதத்தால், திட்டமிட்டபடி 12ஆம் திகதி விவரங்களை கோட்டக் கல்வி அலுவலகங்களில் வைக்க முடியாது போனதாக கல்விப் பணிப்பாளர் தெரிவித்தார். (ஒ-8)

### 238 பேருக்கு 1ஆம் திகதி கிளிநொச்சியில் நியமனம்!

யாழ்ப்பாணம், ஆக. 14

25 ஆயிரம் பயிலுநர் ஆசிரியர்தெரிவின் கீழ் கிளிநொச்சி மாவட்டத்துக்கு 750 பேர் பரீட்சைக்கு அழைக்கப்படவுள்ளனர்.

இம் மாவட்டத்தில் கிடைத்த இரண்டாயிரத்து 100 விண்ணப்பங்களில் 750 விண்ணப்பதாரிகள் நேர்முகப் பரீட்சை, போட்டிப் பரீட்சை ஆகியவற்றுக்கு அழைக்கப் பட்டுள்ளனர்;

இவர்களில் 238பேர் தெரிவு செய்யப்பட்டு எதிர்வரும் முதலாம் திகதி முதல் அவர்களுக்கு நியமனம் வழங்கப் பட இருக்கிறது:

பரீட்சைக்கு தெரிவானவர்களுக்கு இன்றும் நாளையும் பரந்தன் இந்து மகாவித்தியாலயம்; பளை மகாவித்தியாலயம், பூநகரி மகாவித்தியாலயம் ஆகியவற்றில் வைத்து பிரவேச அட்டைகள் வழங்கப்படும்:

கரைச்சி உதவி அரசாங்க

(8-ஆம் பக்கம் பார்க்க)

#### இடமாற்றம் பெற்று வந்த

### 242 ஆசிரியர்களுக்கு இன்று நியமனக் கடிதங்கள்

வெளி மாவட்டங்களில் இருந்து யாழ் மாவட்டத்துக்கு நியமனம் பெற்றுள்ள 242 ஆசிரியர்கள் தமது நியமனக் கடிதங்களை இன்று யாழ் கல்வித் திணைக்களத்துக்கு வந்து பெற்றுக்கொள்ளலாம் என்று யாழ் பிரதிக் கல்விப் பணிப்பாளர் செல்வி ஒ. பெரியதம்பி அறிவித்துள்ளார்:

யாழ் மாவட்டத்துக்குக் கடந்த மாதம் 10ஆம் திகதி முதல் இடமாற்றம் செய்யப்பட்ட 268 ஆசிரியர்களில் யாழ் கல்வித் திணைக்களத்தில் விவரங்களைச் சமர்ப்பித்த 242 ஆசிரியர்களுக்கு இன்று நியமனக் கடிதங்கள் வழங்கப்படவிருக்கின்றன; (ஒ-3)

### பாடசாலைகள் இன்று ஆரம்பம் என அறிவிப்பு

யாழ்ப்பாணம் ஆகஸ்ட் 14

யாழ் மாவட்டத்திலுள்ள பாடசாலைகள் இன்று முதல் மூன்றும் தவணைக்காக ஆரம்பமாக இருக்கின்றன: என்று யாழ் - மாவட்டபிரதிக்கல்விப் பணிப்பாளர்செல்வி. தி. பெரியதம்பி தெரிவித்தார்:

மத்திய கல்வி அமைச்சு மாகாண கல்வி அமைச்சு ஆகியவற்றின் பணிபுப்ரைகளை அடுத்தே இன்று பாடசாலைகள் திறக்கப் படுவதாக அவர் மேலும் தெரிவித்தார்;

(ஒ-3)

### 47 பேர் பலி!

நேற்று மாலை வரையான 36 மணித்தியாலங்களின் போது தென்பகுதியில் 47 பேர் கொல்லப்பட்டனர்.

இவர்களில் 14 பேர் தீவிரவாதிகள் எனத் தெரிவிக்கப் பட்டது: (உ-எ)

### 'மிருதங்க சங்கீத சாஸ்திரம்' இன்று வெளியீடு

பிரம்மஸ்ரீ அ. நா. சோமாஸ்கந்த சர்மாவின் "மிருதங்க சங்கீத சாஸ்திரம்" நூல் வெளியீட்டு விழா இன்று திங்கட்கிழமை பகல் 1 மணியளவில் மருதனுமடம் இராமநாதன் நுண்கலைப்பீடத்தில் இடம்பெறும்.

**சிறப்பிதழ்**

[ 5 ஆம் பக்கத்தில் ]

பேராசிரியர் கா. சிவத்தம்பி விழாவுக்குத் தலைமை வகிப்பார்.

திருமதி ஜகதாம்பிகை கிருஷ்ணனந்தசிவம், திருமதி கிரிசாந்தி ரவீந்திரா ஆகி

[8 ஆம் பக்கம் பார்க்க]

### ரூபவாகினி அதிகாரி வீட்டில் வைத்துசுட்டுக்கொலை

ரூபவாகினிக் கூட்டுத்தாபனத்தின் பிரதம செய்தி ஆசிரியரான திரு. குலசிறி அமரதுங்க நேற்றுக்காலை இரத்மலானையில் உள்ள அவரது வீட்டில் வைத்து இரண்டு இனந்தெரியாத நபர்களால் சுட்டுக்கொல்லப் பட்டார். அவருக்கு வயது 60.

வானொலி அறிவிப்பாளராக இருந்து இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத் தலைவராக பணிபுரிந்து வந்த திரு. தேவிஸ் குருகே தொலைக்காட்சி அறிவிப்பாளர் பிரேமகீர்த்தி ஆகியோரும் அண்மையில் கொலை செய்யப்பட்டவர் என்பது தெரிந்ததே.

திரு. குலசிறி அமரதுங்க இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத் தாபனத்தில் செய்திஆசிரியராக பணிபுரிந்தவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

### இராஜினாமா!

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் தலைவராக அண்மையில் நியமிக்கப்பட்ட திரு. கே. சண்முகலிங்கம் தமது பதவியை இராஜினாமாச் செய்துவிட்டதாக கொழும்பில் தெரிவிக்கப் பட்டது: (உ-13)

### ஆரியகுளம் ரயில்வேகடவை; வந்துசேர்ந்தது கருங்கல்லு!

யாழ்ப்பாணம்; ஆக. 14

யாழ்-பருத்தித்துறை வீதியில் ஆரிய குளம் சந்திக்குச் சமீபமாக சீராக்கப்படாமல் உள்ள ரயில்வே கடவை வீதிப் பகுதியை திருத்தும் வேலைகளுக்குத் தேவையான கருங்கல் வந்துவிட்டதாக பொறுப்பு வாய்ந்த ரயில்வே அதிகாரி ஒருவர் உதயனுக்குத் தெரிவித்தார்.

பிரஸ்தாப திருத்த வேலைக்குத் தேவைப்படும் கருங்கல் வந்து சேராததால் திருத்த வேலைகளில் தாமதம் ஏற்பட்டதாகக் கூறப்பட்டது.

நேற்று முன்தினம் தேவைப்படும் கல் வந்து சேர்ந்ததை அடுத்து திருத்த வேலைகள் மேற்கொள்ள ஏற்பாடாகி உள்ளதாம்.

திருத்தத்திற்குத் தேவையான "ரோலர்" இயந்திரத்தை பெருந்தெருக்கள் திணைக்களத்திடம் அல்லது மாநகரசபையிடம் வாடகைக்கு அமர்த்திக்கொள்ளவும் உத்தேசிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டது. (அ-9)

#### முச்சந்தி முரளி



எத்தனை நாளா உவையள் உதைத்திருத்துகினம்...? வந்த கல்லும் கிணத்திலை போட்ட கல்லாக இருக்காட்டி சரிதான் கண்டியளோ......!

### ஐக்கிய உபவாச ஜெபநாள்

காலம் : 16 ஆவணி 1989 (போயாதினம்)
இடம் : யாழ். பரியோவான் கல்லூரி மண்டபம்
நேரம் : காலை 9 மணிமுதல் 1 மணிவரை

நம் தேசத்தின்
சமாதானத்தையும்
அமைதியையும்
நீதியையும்
வேண்டி ஜெபிக்க
அனைத்துக் கிறிஸ்தவர்களையும்
அன்புடன் அழைக்கின்றோம்.



யாழ். ஜெபக் குழுக்கள்
இணைப்பாளர்
சூரி வில்லியம்ஸ்

(1484)

இனிய! தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

புத்தம் புதிய டீபிறீசர்கள் பல அளவுகளிலும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: நோத் அயர்ண் என்ஜினியரிங் இல. 95, கன்னாதிட்டி றேட், யாழ்ப்பாணம். (கன்னாதிட்டி காளி கோவிலுக்கு முன்பாக) (1511)

பாவித்த அலுமாரிகள் உட்பட வீட்டுத் தளபாடங்கள் அனைத்தும் Fan, Radio மற்றும் மின்சார உபகரணங்கள் குத்துவிளக்குகள், வெள்ளிப் பொருட்கள் Type Writer, சிங்கர் தையல் மெஷின் C B 125 மற்றும் பல மலிவாக விற்பனைக்குண்டு. Supeka, 343, பருத்தித்துறை வீதி, அரசடி, நல்லூர். (1510)

### கோழிக்குஞ்சு விநியோகம்

Golden Comet பிறவுண் பேட்டுக் குஞ்சுகள் 13 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமையும் Hybro புரொயிலர் குஞ்சுகள் 14 ஆம் திகதி திங்கட்கிழமையும் விநியோகிக்கப்படும். முன் கூட்டியே பதிவு செய்க. சற்குணராஜா & பிறதர்ஸ் பிரம்படி லேன், கொக்குவில். (1375)

பிறிமா உத்தரவாதம் உடைய ஒருநாள் லோமன் இன புரொய்லர் குஞ்சுகள் ரூபா 15/50, வெள்ளை ரூபா 16/00 பிறவுண் பேடுக் குஞ்சுகள் 13/50, ஒவ்வொரு வாரமும் வழங்கப்படும். முன் கூட்டியே பதிவு செய்க. கால் நடை உணவுகளுக்கும் எம்மை நாடுங்கள். ஸ்ரீ கிருஷ்ணா ஒயில் ஸ்ரோர்ஸ் 802. பலாலிவீதி, திருநெல்வேலிச் சந்தி. (1372)

### கோழிக்குஞ்சு விநியோகம் (Uplands Farm)

(Cobb) இன புரொயிலர், குஞ்சுகள் (Dekalb) இன பிறவுண் பேட்டுக் குஞ்சுகள், சேவற் குஞ்சுகள் ஒவ்வொரு வாரமும் விநியோகிக்கப்படும். முன் கூட்டியே பதிவு செய்து பெற்றுக்கொள்ளவும். இல. 9 கந்தையா லேன், சுன்னாகம். (புகையிரத நிலையத்துக்கு அருகில்) (1388)

### புலமைப் பரிசிற் பரீட்சை ஆண்டு 5

ஆண்டு 5 புலமைப் பரிசிற் பரீட்சை மாதிரி வினாத்தாள்களை உள்ளடக்கிய பயிற்சிப் புத்தகம் விற்பனைக்குண்டு. தமிழ்-05 கணிதம்-05 பயிற்சிகளை உள்ளடக்கியது. வெளியீடு: 98, செட்டித்தெரு நல்லூர். புத்தகங்களை எம்மிடமும் சம்பந்தர் றேடேர்ஸ் (நல்லை ஆதீனக் கட்டடம்) இலும் பெற்றுகொள்ளலாம் (11794)

### திருமண சேவை

திருமணங்கள் இறைவனின் நியதி: விடா முயற்சியுடனும் தெய்வீக அருளுடனும் திருமணங்களை நிறைவேற்ற நீங்கள் நாடவேண்டிய இடம் சுவாமியார் இராசகுலசிங்கம், 11/7, பண்டாரக்குளம், நல்லூர் வடக்கு. (1391)

### G. C. E. (O/L) கணிதம்

5 மாதிரி வினாத்தாள்களும் 1988 வினாத்தாள் (விடைகளுடனும்) மயூரதி வெளி - 4 ரூபா 13.75 7மாதிரிவினாத்தாள்கள் செய்கைகளுடன் மயூரதி வெளியீடு – 5 ரூபா 17.50: பூபாலசிங்கம், ஸ்ரீலங்கா, ஞானசுரபி, துர்க்கா ஸ்ரேசனர்ஸ், மற்றும் புத்தகசாலைகள். (1389)

## சான்றிதழ்கள்

முல்லைத்தீவு ஆக. 14

முல்லைத்தீவு மாவட்டச் சைவ மன்றம் முல்லைத்தீவு இந்து வித்தியாலயத்தில் நடத்திய 1989 ஆம் ஆண்டுக்கான சைவசமய வகுப்புக்களில் பெரும் எண்ணிக்கையான உதவி ஆசிரியவிண்ணப்பதாரிகள் கலந்து கொண்டனர்.

இவர்களுக்கு விரைவில் இறுதிப்பரீட்சை மூலம் சான்றிதழ்கள் வழங்கப்படும் என மேற்படி மன்றத்தின் பொதுச் செயலாளரும் இந்து வித்தியாலய அதிபருமான திரு. மு. குகதாசன் அறிவிக்கிறார். (க - 72)

## கருத்தரங்கு

மகளிர் விழிப்புணர்ச்சிக் கருத்தரங்கொன்று இம் மாதம் 19 ஆம் திகதி சனிக்கிழமை சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியில் நடைபெறவிருக்கிறது.

இக் கருத்தரங்கில் சாவகச்சேரி உதவி அரசாங்க அதிபர் திரு. பூ. சுந்தரம்பிள்ளை பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

மகளிர் அபிவிருத்தி நிலைய இயக்குநர் திருமதி சரோசா சிவச்சந்திரன் சிறப்புச் சொற்பொழிவாற்றுவார் (க - 31)

### சோதிட மாந்திரீக நிபுணர்

நினைத்த காரியம், ஜாதக பலன், விவாகப் பொருத்தம், எண்சோதிடம், தொழில் விருத்தி, மங்கள மணவாழ்வு மனையில் இலட்சுமி கடாட்சம், சத்துருஜெயம், கிரக தோஷம் முதலான மாந்திரீக விடயங்கட்கு நாடுங்கள் 'சக்தி சரவணா' (அரச அங்கீகாரம் பெற்ற சோதிட மட்டக்களப்பு பாரம்பரிய பரம்பரைமாந்திரீகநிபுணரும்) 210 கஸ்தூரியார் வீதி, (யாழ்/இந்துகல்லூரி மைதானத்திற்கு முன்பாக) யாழ்ப்பாணம். வியாழக்கிழமை விடுமுறை. ([illegible])

25 ஆயிரம் பயிலுநர் ஆசிரியர்:

# நேர்முகப் பரீட்சைக்கு தேவையான ஆவணங்கள் குறித்து அறிவிப்பு

யாழ்ப்பாணம் ஆக 14

25ஆயிரம் பயிலுநர் ஆசிரியர் பதவிக்கு நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவோர் கீழ்க்காணும்ஆவணங்களுடன் வரவேண்டும் என்று யாழ் கல்வித்திணைக்களம் அறிவித்துள்ளது.

★ தேசிய அடையாள அட்டை (தேசிய அடையாள அட்டை இல்லாத பட்சத்தில் புகைப்படம் ஒன்றையும் அப்பிரிவு கிராமசேவகர் உப அரச அதிபரால் உறுதிப்படுத்துவித்து மாதிரிக் கையொப்பத்தை எடுத்து வரல் வேண்டும்.

★ பிறப்புச்சாட்சிப் பத்திரம் [மூலப்பிரதி தவிர்ந்த வேறு பிரதி ஏற்றுக் கொள்ளப்படமாட்டா. பெயரில் மாற்றமிருப்பின் சத்தியக்கடதாசி சமர்ப்பிக்கப்படல் வேண்டும்

★ ஜீ. சி. ஈ [உ த), [சா.த] சான்றிதழ்கள்

★ தாங்கள் விண்ணப்பித்துள்ள உதவி அரசாங்க அதிபர் பிரிவில் மூன்றாண்டுகளுக்கு மேற்பட்ட காலத்திற்கு நிரந்தரமாக வசித்ததை உறுதிப்படுத்துவதற்கான கீழ்வரும் ஆவணங்கள்.

[அ) 1886, 1987, 1988ம் ஆண்டுகளுக்குரிய வாக்காளர்இடாப்பின் பிரித்தெடுத்தபகுதி.

ஆ. கிராம சேவை உத்தியோகத்தரால் வழங்கப் பெற்றஉதவி அரசாங்க அதிபரால் மேலொப்பமிடப்பட்ட சான்றிதழ்: இ. பாடசாலை விடுகைச் சான்றிதழ்.

ஈ. வதிவிடத்தை உறுதி செய்வதற்கான ஏற்றுக் கொள்ளத் தக்க வேறேதேனும் ஆவணங்கள்.

★ அங்கீகரிக்கப்பட்ட சமயப் பாடசாலைகள் நிறுவனங்களால் நடத்தப்படும் சமய அறிவுப் பரீட்சைகள்/ போட்டிகள் ஆகியவற்றில் சித்தி எய்திய சான்றிதழ் பதிவு செய்யப்பெற்ற சமய வகுப்புகளில் கற்பித்தமைக்கான அந்நிறுவனத்தலைவர் வழங்கிய சான்றிதழ்.

★ சமயம்/ அழகியல்/ விளையாட்டு/ விஞ்ஞானம் கணிதம் தொழிற்கல்வி/ மொழிவன்மை ஆகியவற்றில் பெற்ற மிக உயர்ந்த சான்றிதழ் வாழ்க்கைத் திறன்பற்றிய அறிவு, அனுபவம்தொடர்பான சான்றிதழ்.

★ செண் யோண் அம்புலன்ஸ், செஞ்சிலுவைச்சங்கம். சௌக்கியதானம் போன்ற அமைப்புக்களின் ஓர் உறுப்பினர் என்பதற்கு அவ் அமைப்பு வழங்கிய சான்றிதழ்

★ சாரணர், சாரணியர் குழுவில் உறுப்பினராக இருப்பதற்கான சான்றிதழ்.

★ உணவு முத்திரை வறுமை தணிப்பு, [சனசவிய] உதவித் தொகை பெறும் குடும்பத்தின் அங்கத்தவராயின் அதனை உறுதி செய்வதற்கான ஆவணங்கள்.

★ வறுமை தணிப்பு [சனசவிய] வேலைத்திட்டத்தின் செயற்பாடுகளில் உதவியாளராக அங்கத்தவராக (உள்ளூர் மாற்று முகவர்] இருந்தால் அதுபற்றிய உதவி அரசாங்க அதிபரின் கடிதம்.

★ ஓர் ஆண்டுக்காயினும் தொண்டர் ஆசிரியராக அரச பாடசாலையில் சேவை செய்திருந்தால் அப்பாடசாலை அதிபரால் வழங்கப்பட்ட பிராந்தியக் கல்விப்பணிப்பாளரால் மேலொப்பமிடப்பட்டதுமான சான்றிதழ் (சேவைக்காலம் குறிப்பிட்டிருத்தல் வேண்டும் )

★ வர்த்தமானி அறிவித்தலின் 6 ஆம் பந்தியின் கீழ் காட்டப்பட்டுள்ள புள்ளியிடும் திட்டத்தின் பிரகாரம் தாங்கள் பெறக்கூடிய புள்ளிகளின் தொகையை நிரூபிக்கும் வேறு சான்றிதழ்கள்.

★ புத்தமத குருவாயின் குருவாக நிலைப்படுத்தப் பெற்ற சான்றிதழ் (பிறப்புச் சான்றிதழ் பெயரையும் குருப்பட்ட பெயரையும் ஒப்பிட்டுப் பார்ப்பதற்கு இது அவசியமாகும்).

★ ஜீ. சி. ஈ. (உ/த.), (சா/த) சித்தியடைந்த பின்னர் குருப்பட்டம் பெற்றவர்களும் மேலே 13-இல் குறிப்பிட்டுள்ள ஆவணங்களைக் கொண்டு வருதல் வேண்டும்.

★ அண்மையிற் பெற்ற இரண்டு நற்குணச் சான்றிதழ் இவற்றில் ஒன்று கிராம சேவை உத்தியோகத்தரால் வழங்கப்பெற்று உதவி அரசாங்க அதிபரால் மேலொப்பமிடப்பட்டதாக இருத்தல் வேண்டும். (த-3)

## நாடுதிரும்பினார்

சாவகச்சேரி, ஆக. 14

சிங்கப்பூர் அருள்மிகு தெண்டாயுதபாணி கோவில் செட்டியார் திருமண மண்டபத்தில் மூன்றுதினங்கள் நடைபெற்ற ஒன்பதாவது திருமுறை மகாநாட்டில் சிறப்புரை வழங்கச் சென்றிருந்த தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானநிர்வாகத் தலைவி சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி நாடு திரும்பிஉள்ளார்.

சிங்கப்பூரில் அவர் 'திருவிசைப்பாவில் செந்தமிழ்ச் சுவை', 'சேந்தனாரும் பல்லாண்டும்' என்பன பற்றிச் சிறப்புரைகள் வழங்கியதுடன் கேள்வி—பதில் நிகழ்ச்சியிலும் பங்குபற்றினார். (க-31)

## மோசமான வீதி

சுழிபுரம் ஆக. 14

பண்ணாகம் கிராம பிரதான வீதியான வழக்கம்பரை பண்டத்தரிப்பு பகுதியை தொடுக்கும் வீதி போக்குவரத்துச் செய்ய முடியாமல் மிகவும் மோசமான நிலைமையில் இருக்கின்றது.

வீதியின் இருபக்க கரையோரத்தால் மக்கள் சென்று வருகின்றனர்.

வாகனம் செல்ல முடியாமல் வீதி குண்டும் குழியுமாக இருக்கின்றது. குறிப்பாகவழக்கம்பரையில் இருந்து பணிப்புலம் வரை வீதி மிகவும் மோசமாகவுள்ளது. (இ-28)

## புதிய முகாம்

மாங்குளம், ஆக. 14

மாங்குளம் — முல்லைத்தீவு வீதியில் 25 ஆம் கட்டையில் உள்ள வீடு ஒன்றில் இந்திய இராணுவத்தினர் புதிய முகாம் அமைத்துள்ளனர்.

இதே வேளை கடந்த 9 ஆம் திகதி கிளிநொச்சி பஸ் நிலையத்திக்கு முன்பாகவும் புதிய முகாம் அமைக்கப்பட்டது. (இ- 94)


# "ஷப்ரு" வழங்கும் புதிய வட்டி வீதம்

### நிலையானமுதலீட்டுத் திட்டம்

| காலம் | மாதாந்தம் | முதிர்ச்சி |
|---|---|---|
| 3 மாதங்கள் | — | 15% |
| 6 மாதங்கள் | 15% | 17% |
| 12 மாதங்கள் | 18% | 20% |
| 24 மாதங்கள் | 21% | 23% |
| 36 — | 22% | 24% |

### நிறுவனத்தின் நிதி நிலை விபரம்

| | 1984 → 85 | 1985 → 86 | 1986 → 87 |
|---|---|---|---|
| மூலதனம் | 2,230,000 | 4,365,000 | 6,917,000 |
| மொத்த ஒதுக்கம் | 1,385,335 | 3,030,474 | 5,485,354 |
| வைப்பு | 27,737,553 | 58,970,366 | 100,577,492 |
| வங்கிக் கடன்கள் | 1 791,516 | 8,283,618 | 7,716,284 |
| ரொக்கமும் வங்கி இருப்பும் | 4,386,371 | 16,208,887 | 25,811,712 |
| வைப்பாளருக்கான வட்டி செலுத்து முன் லாபம் | 5,783,720 | 9,878,026 | 19,310,787 |
| வைப்பாளருக்கான வட்டி | 3,827,514 | 8,505,201 | 16,880,879 |
| வரிசெலுத்துமுன் தேறிய லாபம் | 1,956,206 | 1,372,825 | 2,430,012 |
| வரிசெலுத்தியபின் தேறிய லாபம் | 1,356,206 | 1,372,825 | 2,330,012 |
| பங்காளருக்கான சலுகைகள் | | | |

நம்பிக்கையுடன் சேமிக்க "ஷப்ரு"வை நடுங்கள்

நிதித்துறையில் உங்கள் நண்பன் அவனே!

பணிப்பாளர் சபை

திரு. எல். ஈ. கருணாரத்ன, சட்டத்தரணி, சமாதான நீதிவான் (தலைவர்)

திரு. எஸ். பாலசுப்பிரமணியம் (A. I. B. Lond.), முகாமைப் பணிப்பாளர்

திரு. ஜே. டி. நவரட்ணம், (A. I. B. Lond.), பொது முகாமையாளர்

திரு. ஏ. எம். எச். பாரி (B. A. Hons.)

திருமதி ஆர். பாலசுப்பிரமணியம்

SHABRA

207, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 22073, 24805

61, பௌத்தலோக மாவத்தை, கொழும்பு -4 தொலைபேசி: 589310, 500576


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## பொய்யாமொழி

குறள்!
ஊனைக் குறித்த உயிரெல்லாம் நாண்என்னும்
நன்மை குறித்தது சால்பு.

பொருள்!
எல்லா உயிர்களும் ஊனுலாய உடம்பை இருப்பிடமாகக் கொண்டவை; சால்பு என்பது, நாணம் என்று சொல்லப்படும் நல்ல தன்மையையே இருப்பிடமாகக் கொண்டது.

உதயன்
இல 292/2, நாவலர் வீதி, தொலைபேசி 24805
யாழ்ப்பாணம்.　22073
14 - 08 - 1989　த. பெ: இல: 33

## கொள்ளிக் கண்ணர்கள்!

சுவிற்சர்லாந்தில் அரசியல் அகதிகள் என்ற பெயரில் தஞ்சம் அடைந்துள்ள ஈழத் தமிழர்களுக்குப் பாதிப்பு ஏற்படும் அபாயம் தோன்றி வருவதாக அறிவிக்கப்படுகிறது. மேலும் மேலும் அகதி அந்தஸ்துக் கோரி பெரும் எண்ணிக்கையான தமிழர்கள் அங்கு சென்றடைவதே இதற்குக் காரணம் என்பது புலனாகி உள்ளது.

சுவிற்சர்லாந்து நாட்டின் அரசியல் தஞ்ச விவகாரத்துக்குப் பொறுப்பான திணைக்களம் நடத்திய கலந்துரையாடல் ஒன்றில், அங்குள்ள தமிழ் அகதிகள் விடயம் விரிவாக ஆராயப்பட்டுள்ளது. அந்நாட்டு அரசாங்கம் ஈழத் தமிழ் அகதிகள் பிரச்சினையை எவ்வாறு அணுகுகிறது என்ற நிலைப்பாடு அதன் மூலம் தெரிய வந்துள்ளது.

ஏற்கனவே தமிழ் அகதிகளின் எண்ணிக்கை, அங்கு ஐயாயிரமாக இருந்தது. இப்போது சிறுவர்கள் உட்பட நாளாந்தம் மேலும் தமிழ் அகதிகள் அங்கு சேர்ந்தவண்ணம் உள்ளனர். அதனால் நாட்டின் செலவினங்களில் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. உள்நாட்டு மக்களும் அதிருப்தி கொண்டுள்ளார்கள்.

இவற்றின் விளைவாக அகதிகளுக்கு வழங்கும் சலுகைகள், வசதிகளை குறைக்க அரசு ஆலோசித்து வருகிறது. மொத்தத்தில் ஈழத்தமிழ் அகதிகளை திருப்பி அனுப்பும் நடவடிக்கைகளை சுவிஸ் அரசு மிக விரைவில் மேற்கொண்டாலும் ஆச்சரியப்படுவதற்கு இல்லை.

ஈழத் தமிழ் அகதிகளைக் கட்டம் கட்டமாகத் திருப்பி அனுப்புவது என்று ஐரோப்பிய நாடுகள் மேற்கொண்டிருக்கும் முடிவுக்கு மிஞ்சியும், சுவிஸ் பெரும் எண்ணிக்கையானோரைத் திருப்பி அனுப்பினாலும் வியப்படைய முடியாது.

''உள்ளதையும் கெடுத்தானாம் கொள்ளிக் கண்ணன்'' என்பது கிராம வழக்கில் ஒரு வாசகம். தமிழர்கள் உள்ளதைக் கெடுப்பதில் எப்போதும் வல்லவர்களாகவே இருக்கிறார்கள். ஒற்றுமையுடன் ஆக்க பூர்வமாக எதனையும் செய்யமாட்டார்கள். ஆனால் விஷயத்தைக் கெடுப்பதிலும், போட்டு உடைப்பதிலும் மகா கெட்டிக்காரர்கள்.

எங்காவது ஒரு வசதி. ஏதாவது சலுகை உண்டென்றால், ஒரு சிலருக்கு அதனை அனுபவிக்கும் வாய்ப்புக் கிடைக்கிறது என்றால், நீ வா, நான் வா என்று ''எக்கச் சக்கமாக'' அங்கு திரண்டு விடுவார்கள். ஏன், அந்த வசதியை அனுபவிப்பவர்களே தமது உறவினர்களை உடனடியாக அங்கு ''இறக்குமதி'' செய்துவிடுகிறார்கள். இறுதியில் அந்த வசதிகள் எவருக்குமே இல்லாமற் போய்விடும்.

1981 ஆம் ஆண்டில் மேற்கு ஜேர்மனியில் ஆரம்பித்த ஈழத்தமிழர்களின் ''உள்ளதையும் கெடுக்கும்'' படலம், ஒவ்வொரு நாடாக முடிந்து இப்போது கனடா வரை தொடர்ந்து கொண்டு தான் இருக்கிறது! பிறர் கோடியில் ஒட்டிக் கொண்டிருக்கிறோமே என்ற கிலேசம் சிறிதும் இல்லாமல் பிற நாடுகளில் வீம்புத்தனம் புரிவதும், மோசடி செய்வதும் வேறு அபகீர்த்தி!

திரைகடல் ஓடியும் திரவியம் தேடுவது வேறு. இன்னொரு நாட்டவரின் அரசியல் தஞ்சம் அளிக்கும் சலுகையைத் துஷ்பிரயோகம் செய்து அந்த நாட்டவருக்கே தொல்லையையும், பாதிப்பையும் கொடுத்து அவமானத்தையும் தேடிப் பரதேசியாக திருப்பி வருவது வேறு. வெட்கக்கேடு. இதனைத் தமிழர்கள் உணர்ந்து திருந்துவது எப்போது?

பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும் நற்றவ வானிலும் நனி சிறந்தனவே — என்று கவிஞன் பாடியதை ஈழத்தமிழர்கள் மறந்துவிட்டார்கள். எந்தையும் தாயும் மகிழ்ந்து குலாவி இருந்ததும் இந்நாடே என்பதைப் பற்றி அவர்களுக்கு அக்கறை இல்லாமற் போய்விட்டது.

அரசியல் பிரச்சினைகள் தொடர்ந்து கொண்டிருக்க உயிருக்குப் பாதுகாப்பு இல்லை என்ற அபாயம் அணையாது வளர, பிறந்த தாயகத்தைவிட்டு ஓடும் படலமே இப்போதும் தொடர்கிறது!

இந்த வெளியேறு காதை நீண்டால், ஆயுதங்களுக்கு இரையாகி மாளுவோர் எண்ணிக்கை பெருகினால் இங்கு மிஞ்சி இருக்கப் போறவர்கள் எத்தனை பேர்? ஒரு சிறிய இனம் இவ்வாறு பலவகைகளாலும் தேய்ந்து போனால் நடக்கப்போவது என்ன?

இவற்றைச் சிந்தித்துப் பார்ப்பவர்கள் எத்தனை பேர்?

## முல்லைத்தீவு மாவட்டத்தில் ஆசிரியர் பற்றாக்குறை

முல்லைத்தீவு ஆ 14

முல்லைத்தீவு மாவட்டத்தில் பற்றாக் குறையாக உள்ள ஆசிரியர்களின் விவரம்;

ஆங்கில ஆசிரியர்கள் 77, ஆரம்ப ஆசிரியர்கள் 212, விஞ்ஞானம் 17, கணிதம் 19, சங்கீதம் 6, சித்திரம் 6, மனையியல் 19, உடற்கல்வி 9, விவசாயம் 10, அதிபர்கள் வெற்றிடம் 50.

வளர்ந்து வரும் இம்மாவட்டத்தின் குறையைத் தீர்க்க கல்வி அமைச்சு விரைவில் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று இம்மாவட்ட மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (க-92)

# வடமராட்சிக் கடற் பகுதியில் தீவிர ரோந்து நடவடிக்கை

## சில இடங்களில் மீன் பிடிக்க தொடர்ந்து தடை விதிப்பு

தாளையடி, ஆக. 14

வடமராட்சிக் கடலில் காணப்படும் படகுகள் அனைத்தும் தீவிர சோதனைகளுக்குட்படுத்தப்பட்டு வருகின்றன.

இங்கு மீன்பிடிப்பதற்கு சில பகுதிகளில் தொடர்ந்தும் தடை விதிக்கப்பட்டிருக்கிறது.

மீன் பிடிப்பதற்கு அனுமதி வழங்கப்பட்ட இடங்களிலேயே சோதனைகள் அதிகரிக்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது.

மீன்பிடிப்பதற்கான 'பாஸ்' பெறப்பட்டனவா என்றும் பார்வையிடப்படுகின்றது.

இந்த பகுதிகளில் அமைதிப்படையினர் இரண்டு இயந்திர படகுகளில் தீவிர ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர். (இ- 144)

## துண்டுப் பிரசுரம்

சேமமடு, ஆக. 14

வவுனியா மாவட்டத்தில் உள்ள வர்த்தகர்கள் பொருள்களை எடுத்துச் செல்வதற்கு முன் அனுமதி பெற வேண்டுமென ஈ. பி. ஆர். எல். எப். துண்டுப்பிரசுரம் மூலம் வேண்டுகோள் விடுத்துள்ளது: (இ-35)

## ஆலய சந்நிதிகளில்

### நாகேஸ்வரம் வருடாந்த மகோற்சவம்

குருநகர், ஆக. 14

அளவெட்டி தெற்கு, ஸ்ரீ நாகவரத நாராயணர் (நாகேஸ்வரம்) தேவஸ்தான வருடாந்த மகோற்சவம் 15ஆம் திகதி (நாளை) செவ்வாய்க்கிழமை முற்பகல் 11-மணிக்கு நடைபெறும் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது:

தினமும் காலை 9 30 மணிக்கு அபிஷேகம், 10 30 மணிக்கு பஜனை, முற்பகல் 11- மணிக்கு பூசைகள், 11-15 மணிக்கு தம்பபூசை, 11 45 மணிக்கு வசந்த மண்டபபூசை நடைபெறும்.

மாலைத் திருவிழா பிற்பகல் 3.30 மணியில் இருந்து மாலை 6 30 மணிவரை நடைபெறும்.

23 ஆம் திகதி புதன்கிழமை பிற்பகல் 5.30 மணிக்கு பஞ்சத் திருவிழாவும், 24 ம திகதி வியாழக்கிழமை முற்பகல் 11 மணிக்கு தேர்த்திருவிழாவும், 25 ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 11.30 மணிக்கு தீர்த்தோற்சவமும் நடைபெறும் (இ-51)

### இன்று தேர்

வேலணை, ஆக. 14

வேலணை பெருங்குளம் முத்துமாரியம்மன் ஆலய சப்பறத்திருவிழா இன்று திங்கட்கிழமையும் தேர்த் திருவிழா நாளை செவ்வாய்க் கிழமையும் இடம் பெறும். (த 167)

### வேட்டைத் திருவிழா

யாழ்ப்பாணம், ஆக. 14

புதுக்குடியிருப்பு அருள்மிகு ஸ்ரீ கந்தசுவாமி கோவில் வருடாந்த உற்சவத்தில் திங்கட்கிழமை வேட்டைத் திருவிழாவும் அதனைத் தொடர்ந்து தேர், தீர்த்தத்திருவிழாக்களும் 17 ஆம் திகதி திருக்கல்யாண வைபவமும் நடைபெறும். (த-6)

### விசேஷ அபிடேகம்

கோப்பாய், ஆக. 14

வடகோவை அருள்மிகு ஸ்ரீ சாந்தி துர்க்கை அம்மன் ஆலயத்தில் நாளை செவ்வாய் கிழமை விசேஷ அபிஷேகமும் ராகுகால தீப பூசையும் தொடர்ந்து அம்பிகை வலம் வருதலும் இடம் பெறும் (க- 72)

### விசேஷ அபிஷேகம்

மானிப்பாய், ஆக. 14

மானிப்பாய் சோதிவேம்படி காளி அம்மன் தேவஸ்தானத்தில் 16 ஆம் திகதி புதன்கிழமை பௌர்ணமி தினத்தன்று மாலை 4 மணிக்கு விசேஷ அபிஷேகம் நடைபெறும்.

அதனைத் தொடர்ந்து திருவிளக்குப் பூஜையும் நடைபெறும். (த- 6)

### மகா சங்காபிஷேகம்

யாழ்ப்பாணம், ஆக. 14

நயினை ஸ்ரீ நாகபூஷணி பரமேஸ்வரி அம்பாள் தேவஸ்தானத்தின் நவோத்திர சகஸ்ர மகா சங்காபிஷேகம் இன்று திங்கட்கிழமை நண்பகல் 11 மணிக்கு நடைபெறும்

இதைத் தொடர்ந்து திரு. இ. ஜெயராஜ்ஜின் சிறப்புச் சொற்பொழிவும் சின்னமணி குழுவினரின் வில்லிசையும் இடம்பெறும்; (க)

அமைதிப்படை விலகல்:-

## ஜனதிபதி தன்னிச்சையாக காலக்கெடு விதித்தது ஏன்?

### குருகுலரத்தின எம்.பி விளக்கம்

கொழும்பு ஆக: 14

இந்திய அமைதிப்படை விலகலுக்கு ஜனதிபதி பிரேமதாஸா ஏன் தன்னிச்சையாக காலக்கெடு விதித்தார்:

நாடாளுமன்ற விவாதத்தின் போது இதற்கு ஐ. தே. க எம்பி திரு. புத்திக்க குருகுலரத்தின பதிலளித்தார்.

அவர் சொன்னதாவது;

காலக்கெடுவை ஜனதிபதி ஏன் விதித்தார் என்று பலர் கேட்கின்றனர்.

அமைதிப்படை விலகலுக்கு டிசம்பர்வரைபொறுத்திருப்போம் என்று ஜனபதி கூறியிருந்தால், இந்தியா இலங்கை முழுவதையும் பிடித்திருக்கும்.

அதனால் ஜனதிபதி தன்னிச்சையாகக் காலக்கெடுவை நிர்ணயித்தார்.

ஏதாவது ஒரு திகதியில் இருந்து விலகலை ஆரம்பிக்கலாம் என்பதே ஜனதிபதியின் எண்ணமாக இருந்தது.

அமைதிப்படை கால அட்டவணை பற்றி நாம் பேசுகிறோம்.

டிசம்பர் 31 உடன் அமைதிப்படை வெளியேறி விடவேண்டும்.

இந்தியாவின் இதயசுத்தியை நம்ப நான் தயாராக இல்லை.

ஆகவே அமைதிப்படை விலகல் பற்றி அவதானிக்க சர்வதேச கண்காணிப்புக்குழு ஒன்றை ஜனதிபதி வரவழைக்க வேண்டும்.

இப்படி திரு. குருகுலரத்தின சொன்னர். (த-எ)

# வர்த்தக வங்கிகள் மீதான கடன் உச்சவரம்பில் விதிவிலக்கு

## மத்திய வங்கி அறிவிப்பு

கொழும்பு, ஆக. 14

வர்த்தக வங்கிகள் மீது ஜூன் 15ஆம் திகதி விதிக்கப்பட்ட கடன் உச்சவரம்பில் இருந்து சில விதிவிலக்குகளை மத்திய வங்கி அறிவித்துள்ளது.

உச்ச வரம்பினால் ஏற்பட்ட பல்வேறு கஷ்டங்களைப்பற்றி வர்த்தக வங்கிகளும் பொது மக்களும் செய்துகொண்ட பிரஸ்தாபங்களைத் தொடர்ந்தே இந்த விதி விலக்குகள் வழங்கப்பட்டுள்ளன.

கடன் உச்சவரம்பு விதிவிலக்கில் விவசாயம், தொழிற்துறை, ஏற்றுமதி ஆகிய மூன்று துறைகளுக்கும் முன்னுரிமை கொடுக்கப்பட்டிருக்கிறது: இந்தத் துறைகளைச் சேர்ந்தவையாக இருந்தும் கடன் உச்சவரம்பு விதிவிலக்கில் குறிப்பிடாத சில விஷயங்கள் இப்பொழுது மத்திய வங்கியால் சுட்டிக் காட்டப்பட்டுள்ளன.

பிரஜா சமூக கடன் வழங்குநர் திட்டம், கிராம அபிவிருத்தித் திட்டங்கள், சுயவேலை வாய்ப்புத் திட்டங்கள், தேசிய இளைஞர் சேவை மன்றம் ஒழுங்கு செய்யும் உதவித் திட்டங்கள், வறுமை ஒழிப்புத் திட்டங்கள், கூட்டுறவுகள் ஜனசவியத் திட்டத்தின் கீழ் பண்ட விநியோகத்தைக் கையாளுதல்:

இது போன்ற விஷயங்களுக்கு இந்த விதிவிலக்கு வழங்கப்பட்டுள்ளது: (க-10)

## கே. ஜி. மரணவிசாரணையில் கார் சாரதி சாட்சியம்

கொழும்பு, ஆக. 14

சினிமாஸ் அதிபர் திரு. குணரத்தினத்தின் மரணம் சம்பந்தமான விசாரணையை கொழும்பு மேலதிக நீதிவான் எம்.எம். ஏ.சபூர் நடத்தினர்.

கார்ச் சாரதி தேவாலகே மெண்டிஸ் அப்போது சாட்சியம் அளித்தார்:

அவர் சொன்னதாவது;

இறந்தவரை மதியபோசனத்துக்காக காரில் ஏற்றிக் கொண்டு சென்றேன்.

பிற்பகல் 1.30 மணி இருக்கும் நிமாலிமோட்டோர்ஸைத் தாண்டிச் சென்ற சமயம் துப்பாக்கிச் சூட்டுச் சத்தம் கேட்டது. இரண்டு பேர் மோட்டார் சைக்கிளில் சாரைத் தாண்டிச் சென்றது தெரிந்தது.

துப்பாக்கிக் குண்டு எந்தப் பக்கத்தில் இருந்து வந்தது என்பதை நான் காணவில்லை. ஆனால் மோட்டார் சைக்கிளில் சென்றவர்கள்தான் சுட்டார்கள் என்பது எனக்கு நிச்சயமாகத் தெரியும்.

அவரது தலையில் இருந்து இரத்தம் பீறிட்டது. சுலைமான் ஆஸ்பத்திரிக்குக் கொண்டு சென்றேன். அவர் இறந்து விட்டார் என்று பரிசோதித்த டாக்டர்கள் கூறினர்.

இப்படி மெண்டிஸ் சொன்னர்.

இரண்டு குண்டுகள் மூளையைத் தாக்கியதால் மரணம் ஏற்பட்டது என்று சட்ட வைத்திய அதிகாரி சல்காது தெரிவித்தார்.

இக் கொலை சம்பந்தமாக பொலீஸார் சிலரை விசாரணை செய்தனர். (த-எ)

### திடீர் மரணம்

முல்லைத்தீவு, ஆக 14

அராலி தெற்கைச் சேர்ந்த சிற்பாசிரியார் நாகமுத்து மார்க்கண்டு என்பவர் (வயது 60) முள்ளியவளையில் திடீர் என மரணமானர்:

திரு. கி. தியாகராச மரண விசாரணை நடத்தி மாரடைப்பால் ஏற்பட்ட மரணம் என்று தீர்ப்பு வழங்கினர். [இ-92]

## நல்லூர் உற்சவகாலச் சிறப்பம்சம்

### சரணமையா! முருகா!!

ராகம்: ரஞ்சனி　தாளம்: ஆதி

பல்லவி

சரவணத்தில் உதித்துப் பிரணவத்தின் பொருளைப்
பரமனுக் குரைத்தவனே சரணமையா — முருகா!!
(சரவ......)

அனுபல்லவி

பழமைமிகு நகராம் நல்லையின் வேலவனே!
பசுபதி பாலகனே! கணபதிக் கிளையவனே!!
(சரவ......)

சரணம்

அன்புளோர் நினைந்துருகும் அருள்விருந்தே வேலா!
நம்பினோர் நயந்துருகும் அருந்துணையே நாதா!!
அண்டினோர் துயர்களையும் அருமருந்தே குமரா!
அண்டரும் துதிபுரியும் அருட்கடலே குகனே!!
(சரவ......)

(இன்று நல்லைக்கந்தன் 9 ஆம் திருவிழா)

## வாசகர் திருமுகம்

### ஏன் இப்படி நடந்து கொள்கின்றனர்?

ஒரு அன்பர் கனடாவிலிருந்து பாதிக்கப்பட்ட பருத்தித்துறை நண்பர் ஒருவருக்கு அனுப்பிய பூர்த்தி செய்த படிவத்தை வைத்து யாழ்ப்பாணத்தில் உள்ள வங்கியில் பணம் எடுக்க முடியவில்லை இந்த அதிகாரி சட்டதிட்டப்படி நடப்பதாகச் சொல்லி வேறு சில படிவங்களைத் தந்துள்ளார். இந்தப்படிவங்கள் கனடாவுக்குப் போய்த் திரும்புகையில் பருத்தித்துறையில் உள்ள பாதிப்படைந்த மக்களின் கதி என்னவாகும்? இதை இவர் சற்றேனும் சிந்தித்ததாகத் தெரியவில்லை.

எங்களுக்குத் தெரிந்தவரையில் பருத்தித்துறையில் இயங்கும் வங்கிகளின் உயர் அதிகாரிகள் நிலைமைக்கு ஏற்றவாறு பல தடவைகள் கை கொடுத்துள்ளார்கள் எங்கள் ஊரில் இப்பணத்தை அன்றே எடுத்திருக்கமுடியும், யாழ்ப்பாணத்தில் உள்ளவர்கள் ஏன் தான் இப்படி நடந்து கொள்கிறார்களோ?

சுவாமி
சித்ருபானந்தா

### இலங்கை வங்கியின் ஸ்ரான்லி வீதிக்கிளை

11ஆம் திகதி காலை 9மணிக்கு இலங்கை வங்கியின் ஸ்ரான்லி வீதி 2 ஆம் கிளைக்கு முன்னல் பெருந் திரளான மக்கள் நிவாரணப் பணத்தைப் பெறக் காத்து நின்றனர்.

காலையில் வங்கி திறந்தும் சில தொடர் இலக்கம் தவிர்ந்த ஏனைய தொடர் இலக்கங்களுக்குபணம்கொடுப்பதாகக் கூறினர்கள். ஆனல் மத்தியானம் 12 மணிக்கு 55 ஆம் தொடர் இலக்கமுடையவர்களுக்கு மட்டும் கொடுப்பதாக அவர்களை உள்ளே வரும்படி கூறினர்கள் மத்தியானம் 12 - 85 மணியளவில் முன் கதவு பூட்டப்பட்டது. நிவாரணப் பணம் பெற வந்த மிகுதி மக்கள் திறப்பார்கள் என்று காத்திருந்தார்கள். 12 - 50க்கு மேல் மாடியில் நின்று மிகுதியானவர்களுக்கு திங்கள் வழங்கப்படும் எனக் கூறினர்கள்.

இதற்கு முந்திய கிழமை சென்றபோதும் இதே மாதிரிப் பதில் கூறப்பட்டது என்று வரிசையில் நின்றவர்கள் சிலர் கூறினர்கள்.

இலங்கை வங்கியில் நிர்வாகம் திட்டமிட்டு செயல்பட்டால் மக்களுக்கு இத்தகைய கஷ்டங்கள் ஏற்படாது; வங்கிக்கும் வீண் ஏச்சுக் கேட்கும் நிலைமை வராது.

ப. திருமாறன்,
திருநெல்வேலி.

## கண்டதும் கேட்டதும்

சில தினங்களுக்கு முன் யாழ். நகரில் சன நெருக்கடி உள்ள பகுதி ஒன்றில் ஓட்டோ ஒன்று வீதியால் சென்ற சைக்கிளை மோதிவிட்டது.

இப்படியான விபத்துக்கள் நடந்தால் இரு தரப்பும் பேசிப் பிரச்சினையைத் தீர்ப்பது தான் இங்கு நடைமுறை சில சமயங்களில் வாய்த் தர்க்கம் கைகலப்பாக முடிவடைந்த சந்தர்ப்பங்களும் இல்லாமல் இல்லை. எனினும் வலியோர் கையே எதிலும் ஓங்கி விடும்.

மேற் கூறப்பட்ட ஓட்டோ — சைக்கிள் விபத்து இடம் பெற்ற சமயம் தற் செயலாக அப்பகுதியால் வந்த வான் ஒன்றில் இருந்தவர்கள் இதனைக் கண்டு விட்டனர். ஓட்டோ சாரதி மது போதையில் இருந்தது தெரிய வந்தது:

வானில் வந்தவர்கள் சைக்கிள்காரருக்கு நஷ்டஈடாக 500 ரூபா வழங்கும்படி உத்தரவிட்டனர். 250 ரூபா உடனடியாக வாங்கியும் கொடுக்கப்பட்டது.

தென் இலங்கையில் உடனடி அபராதம் (Spot-Fine) விதிக்கும் போக்குவரத்துப் பொலீஸாரின் பணிகள் இங்கு இப்படி மறைமுகமாக அமுலாவதாக எடுத்துக் கொள்ள வேண்டியது தான்!

-- செய்தி லோலன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 45 ஆம் நாள் நினைவஞ்சலி



அமரர்

**கந்தையா குலேந்திரா (S, L. A.S.)**

(கோப்பாய் உதவி அரசாங்க அதிபரும், வலிகாமம் கிழக்குப் பிரதேச சபையின் விசேட ஆணையாளரும்)

தோற்றம்: 02 - 11 - 1939

மறைவு- 28 - 06 - 1989

தந்தைபோல் தாய்போல் அரவணைத்தெமக்கு ஆறுதலளித்தீரே!
செயலகம் வருவோர்க்கு செய்கருமம் ஆற்றி வைத்தீர்
01. 01. 1988 தொடக்கம் விசேட ஆணையாளராக விளங்கினீர்
கோபக் கனல் ஒரு துளியும் நின் முகத்தில் கண்டிலமே
இனிக்க இனிக்கப் பேசி இரக்கத்தை சந்தளித்தீர்
எமது சபைதனில் வாரமிரு முறைக்கு வருகை தந்துதவினீர்களே
கண்டதும் நாமும்மை கருணையொடு வரவேற்று கதைத்து வழியனுப்புவமே
நூலகத் திறப்பு விழாவன்று பாரியாரோடும் வருகை தந்து
பக்குவமாய்ப் பேச வைத்து பணிகள் ஆற்றிய உமை
கல் நெஞ்சக் காலனவன் காதவோரழைத்திட்டான்
கவலுகிறோம் ஐயா ... கவலுகிறோம் ஐயா
நின் ஆத்மா சாந்தியடையப் பெருமானைப் பிரார்த்திப்போமாக!

வணக்கம் பல;

வலிகாமம் கிழக்குப் பிரதேச சபையின் உத்தியோகத்தர்கள், ஊழியர்கள்.

(1466)


# காங்கேசன் சிமெந்து பெருமளவில் கொழும்பு எடுத்துச் செல்லப்படுகிறது

## குடாநாட்டில் விலை அதிகரிப்பு கட்டட வேலைகளும் பாதிப்பு

யாழ்ப்பாணம் ஆக. 14
காங்கேசன் சிமெந்துத் தொழிற்சாலையில் உற்பத்தி செய்யப்படும் சிமெந்து பெருமளவில் கொழும்பு கொண்டு செல்லப்படுவதனால் குடாநாட்டில் இதன் விலை அதிகரித்துள்ளது. இந்த விலை அதிகரிப்பினால் கட்டட வேலைகளும் பாதிக்கப்பட்டுள்ளன;

காங்கேசன்துறையில் உள்ள இரண்டு சிமெந்துத் தொழிற்சாலைகளில் ஒன்று மட்டுமே அதுவும் ''ஜெனரேற்றர்'' மூலம் இயங்கி வருகிறது.

இதனால் ஒரு நாளைக்கு 25 லொறிகளுக்கு மட்டுமே — அதாவது 5 ஆயிரம் பக்கெட்டுக்கள் — சிமெந்து வழங்கப்படுகிறது.

அவற்றில் பெரும்பாலானவை கொழும்புக்கே கொண்டு செல்லப்படுகின்றன.

இதன் காரணமாக குடாநாட்டில் சிமெந்தின் விலை 150 ரூபாவைத் தொட்டுவிட்டது.

சிமெந்து விலையேற்றத்தின் விளைவாக கட்டடங்கள் வீடுகள் போன்றவற்றைக் கட்டுவோர் வேலைகளை ஒத்திப் போட்டுவிட்டனர்;

இதனால் இந்தத்தொழில் சம்பந்தப்பட்ட அனைவருமே பாதிக்கப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது. (இ-த)


St. John's College. Jaffna and Chundikuli Girls' College, Jaffna

**ADMISSION-1990**

1. Vacancies exist, ONLY in the following Classes:-
   a) Year ONE and Year SIX. (St. John's & Chundikuli Girls' College).
   b) Year NINE. (Chundikuli - Girls' College ONLY).
2. APPLICATIONS CLOSE ON 20 th SEPTEMBER, 1989
   i) On Forms available from the respective Schools between 1st September and 15th September, 1989.
   ii) Applications on other Forms will NOT be considered;
   iii) Forms received after 20th September. 1989 will NOT be considered.
3. Applications must be accompanied by Birth Certificates. Forms incorrectly or incompletely filled will be rejected.
4. Application Forms can be obtained from the respective Schools in person or by post at Rs. 25/- per Form for Year ONE and Rs. 50/- per Form for Year SIX and Year NINE.

In person:

On School days between 9 00 a.m. and 2 00 p m.

By post:

Send a Money Order or Postal Order for the amount with a self addressed stamped long envelope

5 AGE LIMITS:
   i) Year ONE: Applicants should have been born between 01-02-84 and 31-01-85.
   ii) YEAR SIX: Applicants should have been born on or after 01-02-79.
   iii) Year NINE: Applicants should have been born on or after 01-02-76.
6. ADMISSION TEST for Year SIX and Year NINE: Saturday, the 7th October, 1989, beginning at 8.30 a.m

**PRINCIPALS.**

Jaffna.

[c-3291]


## வங்கியின் வளர்ச்சி வாடிக்கையாளர் கையில்

### வவுனியா பொன் விழாவில் உரை

யாழ்ப்பாணம் ஆகஸ்ட் 14
வங்கியின் எதிர்காலவளர்ச்சி வாடிக்கையாளர்களின் பூரண திருப்தியிலும், முன்னேற்றத்திலும் தங்கியுள்ளது, அதற்கு இலங்கை வங்கி தன்னைதயார் செய்துள்ளது:

இலங்கை வங்கியின் கிளையில் நடைபெற்ற பொன்விழா' நிறைவு நாள்கொண்டாட்டங்களில் கலந்து கொண்டு உரையாற்றிய வவுனியா, மன்னார் இலங்கை வங்கி மாவட்ட முகாமையாளர் திரு. இ. வில்வராஜா இவ்வாறு குறிப்பிட்டார்.

அலங்கரிக்கப்பட்ட மைதானத்தில் வெகு சிறப்பாகக் கொண்டாடப்பட்ட இந்த விழாவில் நூற்றுக்கணக்கான வாடிக்கையாளர்கள் அரசாங்க கூட்டுத்தாபன உத்தியோகத்தர்கள். வர்த்தகப் பெரியோர்கள் ஆகியோரும் கலந்து சிறப்பித்தனர்: வவுனியா வர்த்தகர் சங்கசெயலாளர் திரு. சண்முகராஜா இலங்கை வங்கியின் கடந்த கால சேவையைப் பாராட்டி நன்றியும் தெரிவித்தார்.

வங்கி தனது சிறந்த பணியைத்தொடர வேண்டும் என வாழ்த்தும் கூறினார்.

(உ-த)

## மட்டு.விமானப்படைமுகாம்விஸ்தரிப்பு:

# இடம்பெயர்ந்தோருக்கு ரூ.1கோடி 38 லட்சம் நஷ்டஈடு

மட்டக்களப்பு, ஆகஸ்ட் 14
மட்டக்களப்பு விமானப் படை முகாம் விஸ்தரிப்பு காரணமாக இடம் பெயர்ந்தவர்களுக்கான நஷ்டஈடு தொகையாக 1 கோடி 38 லட்சத்து 53 ஆயிரத்து 166 ரூபா வழங்கப்படும்

—இத்தகவலை உதவி காணி ஆணையாளர் திருமதி எஸ். கே. அன்னராஜ் தெரிவித்தார்:

விலை மதிப்பீட்டுத் திணைக்களம் நஷ்டஈட்டுத் தொகையாக 1 கோடி 21 லட்சத்து 51 ஆயிரத்து 90 ரூபா சிபார்சு செய்துள்ளது.

பாதிக்கப்பட்டவர்களுக்கான நஷ்டஈடு வட்டியுடன் வழங்கப்படவேண்டுமென்பதற்காகவே மிகுதிப் பணம் தேவை என பாதுகாப்பு அமைச்சுக்கு காணி அமைச்சின் செயலாளர் மூலம் மதிப்பீடு அறிக்கை சமர்பிக்கப்பட்டுள்ளது.

இந்நஷ்டஈடு தொகை கிடைத்தவுடன் தாமதமின்றி பாதிக்கப்பட்ட 196 குடும்பங்களுக்கும் வழங்கப்படும். -இவ்வாறு அவர் மேலும் தெரிவித்தார். [உ-21]

## வட்டியில்லா வங்கிமுறை அமுல் நடத்த பிரேரணை

கொழும்பு, ஆக: 13
வட்டியில்லா வங்கி நடைமுறையை இலங்கையிலும் அமுல்நடத்தவேண்டும் என்று அரசைக் கேட்டுக்கொள்ளும் தனி நபர் பிரேரணை ஒன்றை நாடாளுமன்றத்தில் கொண்டுவர ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ஜனாப் அஷ்ரப் முன்னறிவித்தல் கொடுத்திருக்கிறார்.

வட்டி சம்பந்தப்படாத வகையில் வங்கி நடவடிக்கைகளை மேற்கொள்ளக் கூடிய வகையில் 'வட்டியில்லா வங்கி முறை' இலங்கையில் நிறுவப்படவேண்டும் என்று ஜனாப் அஷ்ரப் தனது பிரேரணையில் தெரிவித்திருக்கிறார்.

நாடாளுமன்றச் செயலாளர் நாயகத்திடம் பிரேரணை கையளிக்கப்பட்டுவிட்டது (த-எ)

## சுகாதார வசதி விஸ்தரிக்கப்படும்

திருகோணமலை ஆகஸ்ட் 14
1990 ஆம் ஆண்டளவில் வடக்கு, கிழக்குப் பகுதியில் 800 ஆரம்ப சுகாதார நிலையங்களை ஆரம்பிக்க ஆவன செய்யப்படும்.

இதற்கான முயற்சியில் வடக்கு, கிழக்கு மாகாண சபை ஈடுபடும் என சபையின் வரவு - செலவுத்திட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-150)

## ''ஐரோப்பிய தமிழ் எழுத்தாளர் ஒன்றியம்''

# தனிநாயகம் அடிகள் நினைவு குறுநாவல் போட்டி!

யாழ்ப்பாணம், ஆக. 14
''ஐரோப்பிய தமிழ் எழுத்தாளர் ஒன்றியம்'' தனிநாயகம் அடிகள் நினைவாக குறுநாவல் போட்டி ஒன்றினை நடத்தவுள்ளது:

அனைத்துலக நாடுகளில் வாழும் தமிழ் எழுத்தாளர்களை ஊக்குவிக்கும் பொருட்டு சர்வதேச ரீதியில் இப்போட்டி நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி ஒன்றியம் கடந்த நான்கு ஆண்டுகளாக பிரான்ஸ் நாட்டில் பதிவு செய்யப்பட்ட நிறுவனமாக இயங்கி வருகிறது;

இதன் கிளை ஸ்தாபனங்கள் சுவிட்சர்லாந்து, மேற்கு ஜேர்மனி, லண்டன் போன்ற இடங்களில் இயங்குகின்றன. (இ-சி)

## திருமலையில் தொழில் பேட்டை

திருகோணமலை, ஆகஸ்ட் 14
திருகோணமலையில் கைத்தொழில் பேட்டை ஒன்று உருவாக்கப்படவிருக்கிறது.

அங்கு இருபதிற்கும் மேற்பட்ட சிறு கைத்தொழில் நிலையங்களை ஆரம்பிப்பதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. (உ-150)





# டியூரோல்®

டியூரோலில் அடங்கியுள்ள இரும்புச் சத்து, உடலில் இரத்த விருத்தியை உண்டுபண்ணி இரத்த சோகை நோயின் அறிகுறிகளான சோர்வு, பலவீனம், மந்தம் என்பனவற்றை இல்லாமற் செய்து ஆரோக்கியமான வாழ்விற்குத் தேவையான ஊட்டச்சத்துக்களை வழங்குகிறது.

Grant BJK&E PFL 1157

'செறி' சுவை கொண்ட, வளர்ந்தோருக்கான டியூரோல்®

ஆப்பிள் சுவை கொண்ட பிள்ளைகளுக்கான டியூரோல்®

தினமும் டியூரோல்® அருந்துங்கள். அது சுறுசுறுப்பானவர்களின் பானம்.

Pfizer

®ஃபைசர் கூட்டுத்தாபனத்தின் வர்த்தக அடையாளம.



## பிறந்த நாள் வாழ்த்து

★ செல்வன் நந்தகோபன் ★

சுன்னாகத்தைச் சேர்ந்த திருவாளர் க. வைத்தியநாதன் - இந்திராணி தம்பதிகளின் அருந்தவப் புதல்வன் செல்வன் நந்தகோபன் தனது மூன்றாவது பிறந்த நாளை 14-08-89 இன்று (திங்கட்கிழமை) கொண்டாடுகிறார். இவரை அன்பு அப்பா, அம்மா, அம்மம்மா, அப்பாச்சி, பெரியப்பாமார், சித்தப்பாமார், பெரியம்மாமார், சித்திமார், அண்ணன்மார், அக்காமார், மாமாமார், மாமிமார் மற்றும் ஓமான் மாமா, மாமி அனைவரும் ஸ்ரீதுர்க்கை அம்மன் அருளால் பல்கலையும் கற்று சுகதேகியாக பல்லாண்டு காலம் வாழ மனமார வாழ்த்துகின்றனர்.

தில்லைகட்டி ஒழுங்கை,
சுன்னாகம்.

(சி/3282)



## சென்ஜோன்ஸ் கல்லூரி, யாழ்ப்பாணம்.

**ஆண்டு 11 மாணவர்களுக்கு**

I. மேற்படி வகுப்பில் கற்கும் மாணவர்கள் க. பொ. த. [சாதாரணம்] பரீட்சை டிசெம்பர் 89-விண்ணப்பப் படிவங்களில் ஒப்பமிடுவதற்காக இம்மாதம் 21ஆம் 22 ஆம் திகதிகளில் காலை 9 மணி முதல் 12மணி வரை - தேசிய அடையாள அட்டையுடன் கல்லூரியில் சமுகமளிக்கும்படி வேண்டப்படுகின்றனர்.

II. மீளப் பரீட்சைக்குத் தோற்றுபவர் (Sp. V) 17 ஆம் 18 ஆம் திகதிகளில் விண்ணப்பப் படிவங்களைக் கல்லூரியில் பெற்று பூர்த்தி செய்து கையளிக்கவும்.

—அதிபர்

08.08.1989

(சி/3274)



★ வேகமாக விற்பனையாகின்றன

## அஸ்ரன் வெளியீடுகள்

ஆசிரியர் பயிலுநர் போட்டிப் பரீட்சைக்குரிய

**பொது அறிவு - பொதுஉளச்சார்பு** [விலை 65/50]

( 1984. 87 பரீட்சைகளின் வினா-விடைகளை உள்ளடக்கியது )

**S. L. A. S.** மட்டுப்படுத்தப்பட்ட பரீட்சைக்குரிய

**கிரகித்தல், நுண்ணறிவு, விடயஆய்வு**

(1986 87 பரீட்சைகளின் வினா-விடைகளை உள்ளடக்கியது)

★ எல்லாப் புத்தகசாலைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.

கேட்டு வாங்குங்கள்!

அஸ்ரன் வெளியீடுகள்!!

(சி-3276)



## அறிவித்தல்

சுகாதார சேவைகள் பிராந்தியப்பணிப்பாளர் அலுவலகம் - யாழ்ப்பாணம்

**பாவித்த வாகனங்களின் ஏலவிற்பனை**

இத் திணைக்களத்தினால் பாவிக்கப்பட்டு பழுதடைந்த கீழ்க்காணும் வாகனங்கள் எதிர்வரும் 24-08-89 காலை 10.00 மணியளவில், 304/3 ஆஸ்பத்திரி வீதி யாழ்ப்பாணத்திலுள்ள எமது மருந்துக் களஞ்சிய வளவினுள் வைத்து பகிரங்க ஏலவிற்பனை செய்யப்படும்.

(1) 33 ஸ்ரீ 5576 வோக்ஸ்வேகன் வான்
(2) 33 ஸ்ரீ 8288 ,, ,,
(3) 33 ஸ்ரீ 7519 ,, ,,

இவ் வாகனங்களைப் பார்வையிட விரும்புவோர் மேலே குறிப்பிட்ட விலாசத்தில் அலுவலக நாட்களில் பார்வையிடலாம் என்பதை அறியத்தருகிறேன்;

அதியுயர் கேள்விக்காரர் தனது கேள்வித் தொகையை உடனடியாக இவ் அலுவலகத்தில் செலுத்தி குறித்த வாகனத்தை அன்றைய தினமே அப்புறப்படுத்தல் வேண்டும்.

இது சம்பந்தமான மேலதிக விபரங்களை 59, விக்ரோறியா றோட், யாழ்ப்பாணத்திலுள்ள எனது அலுவலகத்தில் வேலை நாட்களில் அறிந்து கொள்ளலாம்.

ந. கனகசபை,
சு. சே. பி. பணிப்பாளர்.
யாழ்ப்பாணம்.

(சி-3284)



## அந்தியேட்டி அழைப்பு

**அமரர் நாகுப்பிள்ளை சின்னையா**

சங்கானையைச் சேர்ந்த திருமதி நாகுப்பிள்ளை சின்னையா அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் அவரது இல்லத்தில் 14-08-1989 திங்கட்கிழமை காலை 10-00 மணியளவில் நடைபெறும். உறவினர்களையும் நண்பர்களையும் கலந்துகொள்ளும்படி அன்புடன் அழைக்கின்றோம்.

பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

பிளாக் றோட்,
சங்கானை.

(1478)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மிருதங்க சங்கீத சாஸ்திரம் நூல் வெளியீட்டு விழா சிறப்புமலர்

நூல் வெளியீட்டு விழா சிறப்புற
**வாழ்த்துகின்றோம்**

மங்கள வைபவங்களுக்கேற்ற
★ கூறைச்சேலைகள்
★ காஞ்சிபுரம்
★ சேட்டிங், சூட்டிங்
★ பட்டுவேட்டி சால்வைகளுக்கும்
புகழ் பெற்ற ஸ்தாபனம்
**லிங்கம்ஸ் சில்க் ஹவுஸ்,**
18, நவீன சந்தை, மின்சார நிலைய வீதி.
கிளை: 21, நவீன சந்தை மேல்மாடி யாழ்ப்பாணம்.

பாடசாலை உபகரணங்கள் புத்தகங்கள்,
போட்டோஸ்ரட் பிரதிகள், வாழ்த்துமடல்கள்.
அனைத்திற்கும் சிறந்த ஸ்தாபனம்
**மண்டேலா ரேடர்ஸ்**
[புத்தகசாலை]
இல. 2. பஸ் ஸ்டான்ட்.
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

**மங்களபதி வைத்தியசாலை,**
41/5. அரச வீதி, நல்லூர்.
திறமான அஷ்டபந்தன மருந்து, சந்தனப்பவுடர்,
சந்தனவில்லை பச்சைச் சந்தனம், குங்குமங்களுக்கு
சிறந்த ஸ்தாபனம்
**ருக்மணி வாசனைத் தொழிற்சாலை.**
A G. மூர்த்தி. நல்லூர்.

சகலவிதமான மின்சார உபகரணங்களும்,
வீட்டுப் பாவனைப் பொருட்களும், T.V. றேடியோ,
அன்ரனா பூஸ்டர் ஆகியவற்றிற்கு
**நியூ சிற்றி ரேடர்ஸ்,**
135 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

தரமான தங்க நகைகளுக்கு
**கலைவாணி ஜுவலர்ஸ்**
111 B, கஸ்தூரியார் வீதி. யாழ்ப்பாணம்.

★ கறுப்பு-வெள்ளை கலர்ப் புகைப்படங்களுக்கும்
★ புளக் தயாரிப்புக்களுக்கும்
★ போட்டோஸ்ரற் பிரதிகளுக்கும்
★ அடையாள அட்டை போன்ற முக்கிய
தஸ்தாவேஜுகளை லமினேஷன் (Lamination)
செய்வதற்கும் நீங்கள் நாடவேண்டிய ஸ்தாபனம்
**சித்திராலயா ஸ்ருடியோ,**
18. ஸ்ரான்லி றேட், யாழ்ப்பாணம்.

சிறந்த தங்க நகைகளுக்கும். இரத்தினக் கற்கள்,
வைரம் ஆகியவற்றிற்கும் நம்பிக்கையான ஸ்தாபனம்
**வோக் ஜுவலர்ஸ்,**
213 D. கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

T. V. டெக், றேடியோ, கஸெட்றெக்கோடர்,
சகலவிதமான பான்ஸி பொருட்களுக்கும்
நம்பிக்கையான ஸ்தாபனம்
**வாலாம்பிகா ரேடர்ஸ்,**
2 1/5 ஸ்ரான்லி றேட் யாழ்ப்பாணம்

சிறந்த மரத் தளபாடங்களுக்கும், தலையணை
மெத்தைகள் போன்றவற்றிற்கும்
சிறந்த ஸ்தாபனம்
**பவானி பேணிச்சர் பலஸ்,**
நம் 121 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

மணிக்கூடுகள் திருத்தவும், நியாயமான விலையில்
எல்லாப் பொருட்களும் பெற்றுக் கொள்ளவும்
சிறந்த இடம்:
மின்சாரத் தடை இருந்தாலும் வேலைகள் தடையின்றி
மின் இணைப்பு மூலம் நடைபெறும்.
**ரதி வாச் வேக்ஸ் அன் ஸ்ரோர்ஸ்**
42, 44. 46 கஸ்தூரியார் வீதி. யாழ்ப்பாணம்.

"விராட் விஸ்வப் பிரமனே நம"
**ரூபி ஜுவல்லறி,**
நம் 111, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

அதி சிறந்த. தரமான இறக்குமதியான
மியூசிக் கருவிகள்
விற்பனையாளர்களும், திருத்துபவர்களும்
**நாதன் மியூசிக் ஸ்ரோர்ஸ்,**
40 முனீஸ்வரன் வீதி யாழ்ப்பாணம்.

சகலவிதமான அழகுசாதனப் பொருட்கள்
அன்பளிப்புப் பொருட்கள், நூல் வகைகள்,
கோல்ட் கவறிங் நகைகள்,
நிதான விலையில் பெற்றுக்கொள்ள எம்மை நாடுங்கள்
**அம்பிகாபதி பான்சி றேடர்ஸ்,**
9 A நவீனசந்தை யாழ்ப்பாணம்.

**விநாயகர் ஸ்ரோஸ்**
**அன் பேக்கறி**
நீலியம்பனை — மல்லாகம்

## நந்தி எம்பெருமானுர் நமக்கு நல்கிய நல்லிசைக்கருவி மிருதங்கவாத்தியம்

சிவநேயச் செல்வர்களே!

மிருதங்க வித்துவான் சிவஸ்ரீ சோமாஸ்கந்த சர்மா அவர்கள் பெருமுயற்சி எடுத்து, யாத்து அளித்திருக்கும் மிருதங்க சங்கீத சாஸ்திரம் என்ற

எழுந்தருளிநந்தி எம் பெருமானின் மிருதங்க வாசிப்பில் மதிமயங்கி, பெருவகை கொண்டு—

'நந்தி தொம், தா' என்று தானும் மிருதங்கம் வாசிக்க

**—ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய ஸ்வாமிகள்—நல்லை ஆதீன முதல்வர்**

அருமையான இசை நூலினைக் கண்ணுற்றோம். நடராஜப் பெருமானின் ஆனந்தத்தாண்டவத்துக்கு இசைய நந்திஎம் பெருமான் மிருதங்கம் வாசித்துக்கொண்டிருந்தார்.

அவ்வமயம் விஷ்ணு பகவான் இத்தரிசனத்துக்காக அங்கு ஆசையுற்று (தொம்) மிருதங்கத்தை நந்திஎம் பெருமானிடம் கேட்டாராம்; 'தா, தீ, தொம். நம்' என்ற மிருதங்க சொல்வரிசை உருவானமூலமேஇதுதான் என்பர் ஆன்றோர். எனவே இவ்வாத்தியம் தெய்வீக சம்பந்தமுள்ளதென்பது தேற்றம்.

மிருதங்கம் பயிலும், பயில ஆர்வமுள்ள மாணவ, மாணவிகளுக்கு இந்நூல் அரியதொரு ஆசானாக விளங்கும் என்பது எமது கருத்து. ஆசிரியர் நலமாக நீடுவாழ்ந்து இன்னோரன்ன நூல்களை யாத்து இசை உலகத்துக்கு ஈயவேண்டும் என எல்லாம்வல்ல பரம்பொருளின் பாதாரவிந்தங்களைத் தியானித்து எமது உளமார்ந்த நல்லாசிகளை வழங்குகிறோம்.

என்றும் வேண்டும்
இன்ப அன்பு!

### மாணவர்களுக்கு உகந்த மிருதங்க கைநூல்

நிகழும் ஆடி மீ 30ஆம் திகதி 14-8-1989 இன்று திங்கட்கிழமை பகல் 1 மணியளவில் மிருதங்க வித்துவான் பிரம்ம ஸ்ரீ அ. நா. சோமாஸ்கந்தசர்மா மிக்கவர்கள். அவர் யாத்து வெளிவந்திருக்கும் இவ்வரிய நூல் இத்துறையில் கற்கும் மாணவர்க்கும், ஏனைய மிருதங்க மாணவர்க்கும் பெரும் உபயோகமானதாக இருக்கும்.

**பிரம்மஸ்ரீ கா கைலாசநாதக் குருக்கள்,**
**பேராசிரியர், இந்துநாகரிகத்துறை,**
**யாழ், பல்கலைக்கழகம்.**

அவர்கள் எழுதிய மிருதங்க சங்கீத சாஸ்திரம் என்னும் நூல் வெளிவர இருப்பதாக அறிந்து பெருமகிழ்ச்சியடைகிறேன்.

இராமநாதன் நுண்கலைக் கழகத்தில் மிருதங்கத்துறையில் பணியாற்றும் சர்மா அவர்கள் நீண்ட அநுபவம் ...கும்.

இது இவ்வாறு வெளியாகும நூல்களுக்கு வழிகாட்டியாயமைந்து பெரும் பயன் தரும். இன்னும் பல நூல்களைப் பயன்படுமாறு இயற்றி வெளியிடும் ஆற்றலை இறைவன் இவருக்கு அருள வேண்டும் என்று பிரார்த்தித்து ஆசி கூறுகின்றேன்.

### தெய்வவாத்தியம் மிருதங்கம்

மஹோத்ஸவ காலங்களிலே மிருதங்க இசைக்குத் தனித்துவமானதோர் இடம் ஸ்தம்ப பூசையின்போது தரப்பட்டுள்ளது. மிருதங்க இசையுடன் தாளமும் சேர்ந்து ஸ்தம்ப

**மஹாராஜஸ்ரீ சு. து. ஷண்முகநாதக்குருக்கள்**
**மாவை ஆதீனகர்த்தா**

பூசை நடைபெற வேண்டும் என்பது விதி; சாஸ்திரிய சங்கீதத்திலும் மிருதங்கம் பிரதானமானதோர் இடத்தைப் பெறுகிறது. தொன்மையானதும், தெய்வீகமானதுமான மிருதங்க சங்கீதம் உலகியல் வாழ்வியலுக்கு பலவித கோணங்களிலும் துணைதருவது கண்கூடு.

மிருதங்கத்தில் பிரமா, விஷ்ணு, ருத்ரா, சப்தமித்ருக்கள் இன்னும் பல முக்கிய

(6ஆம்- பக்கம் பார்க்க)

## நுட்பங்களை உணர்த்தும் நூல் "மிருதங்க சங்கீத சாஸ்திரம்"

மிருதங்க வாத்தியத்தின் அதிதேவதையாக விளங்குபவர் நந்திதேவர். அகிலத்தை இரட்சிக்கும் ஆனந்த நடராஜ மூர்த்தியின் அநவரதத் தாண்டவத்துக்கும் நந்தி தேவரின் மிருதங்கந்தான் பக்கவாத்தியமாக அமைகிறது.

லயவாத்தியங்களுள் மிருதங்கம் சிரேஷ்டமான வாத்தியமாக மிருதங்கம் கருதப்படுவதற்கான காரணங்களில் இது ஒன்று. கர்நாடக இசையில வாய்ப்பாட்டு, வயலின், மிருதங்கம் என்ற மூன்றின் இணைப்பு அடிப்படையான இணைப்பாக உள்ளதையும் நாம் அறிவோம். ஓர் இராகத்தை எப்படி நீண்டநேரம் ஆலாபனை செய்ய முடியுமோ அவ்வாறே மிருதங்கமும் ஒரு தாளத்தை எடுத்துக்கொண்டு ஆரம்பம், விரிவு, முடிவு என்னும் பகுதிகளுடன் நீண்ட நேரம் வாசிக்க முடியும்.

இத்தகைய பெருமை வாய்ந்த மிருதங்க வாத்தியத்திலே தேர்ச்சி பெறுவதற்குத் தெரிந்து கொள்ள வேண்டிய நுட்பங்களை எல்லாம் உணர்த்தும் 'மிருதங்க சங்கீத சாஸ்திரம்'' நூல் இன்று வெளியாகிறது. யாழ். பல்கலைக்கழக இராமநாதன் நுண்கலைப் பிரிவில் இது வெளியாவது மிகவும் பொருத்தமானது.

இவ்வரிய நூலை எமக்களித்த பிரம்மஸ்ரீ அ. நா. சோமாஸ்கந்தசர்மா அவர்கள் பல்லாண்டு வாழ்ந்து, இத்தகைய அரியநூல்கள் பல வெளியிட எல்லாம் வல்ல ஸ்ரீ நகுலாம்பிகாசமேத நகுலேஸ்வரப் பெருமானின் உபய சரணாரவிந்தங்களைத் தியானித்து ஆசீர்வதிக்கின்றோம்.

**க, நகுலேஸ்வரக்குருக்கள்'**
**நகுலேஸ்வர தேவஸ்தானம்,**
**நகுலேஸ்வரம். (கீரிமலை)**

**மலர் தொகுப்பு:**
**கோப்பாய் சிவம்.**
**இராசையா ஸ்ரீதரன்**

'மிருதங்க சங்கீத சாஸ்திரம்' நூல் வெளியீட்டு
விழா சிறப்படையவும் அதன் ஆசிரியருக்கும்
★ எமது நல்வாழ்த்துக்கள் ★
நீரிழிவு வியாதிகளுக்கு உகந்த வைத்தியர்களினுல்
சிபார்சு செய்யப்பட்ட
★ வறுத்த கோதுமை அரிசிக் குறுனல்
★ வறுத்த கோதுமை அரிசி றவை
★ கோதுமை அரிசி ஆட்டாமா
● பாவித்துப் பயனடையுங்கள் ●
**M. G. M & STORES**
777. கே. கே. எஸ். வீதி & 208. முதலாம் குறுக்குத் தெரு.
யாழ்ப்பாணம்.

'மிருதங்க சங்கீத சாஸ்திரம்'
நூல் வெளியீட்டு விழா சிறப்புற
★ எமது நல்வாழ்த்துக்கள் ★
மூன்று தலை முறையாக சேவையாற்றி
வரும்
★ ஒரே ஒரு ஸ்தாபனம் ★
**யப்பான் ஜுவலர்ஸ்**
[க. ஆறுமுகம்பிள்ளை அன் சன்]
64, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.

நூல் வெளியீட்டு விழா சிறப்புற
**வாழ்த்துகின்றோம்**

நல்லூரில் அமைந்துள்ள அண்ணா கோப்பி விளம்பர நிலையத்தில் வெற்றுப் பக்கட் கொடுத்து இனம் பொருட்களைப் பெற்றுக் கொள்ளுங்கள்.
**அண்ணா தொழிலகம்**
இணுவில்

உயர்ரக உருக்கு அலுமாரிகள் (Steel Cupboards)
தளபாடம் மற்றும் ஏனைய உற்பத்தியின்
முன்னோடிகள்.
**ஜெனுடென்ஸ்**
கே கே எஸ் வீதி. இணுவில்.

மளிகைச் சாமான்கள் மொத்தமாகவும், சில்லறையாகவும்
பெற்றுக் கொள்ள நாடுங்கள்.
**NATHAN & BROTHER**
No: 2, கே. கே. எஸ். வீதி. சுன்னுகம்.

★ **இ. சுப்பிரமணியம்** ★
**அன்கோ**
நம் 8, கே கே எஸ் வீதி, சுன்னுகம்

சிறந்த வீடியோ படப்பிடிப்புக்கும்
கலர், கறுப்பு வெள்ளைப் படங்களுக்கும்
**நியூ சித்திரகலா ஸ்ருடியோ**
நம். 70, 72, கே.கே.எஸ் வீதி. சுன்னுகம்.

★ **ஞானேஸ்வரன்** ★
**அரிசி ஆலை**
இணுவில்-

★ **கமலேஸ்வரி**
**களஞ்சியம்** ★
119/2, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

சுவையிக்க சிற்றுண்டி, பிஸ்கட், பீடா
மற்றும் ரீ, கோப்பி, மல்லி, குளிர்பான வகைகளுக்கும்
நாட வேண்டிய இடம், ஓடர்கள் செய்தும் பெற்றுக்
கொள்ளலாம். அத்துடன்
சுன்னுகம் இருந்து வெள்ளவத்தை வரை தினசரி
பஸ் சேவை ஆசனங்களை முன் கூட்டியே பதிவு செய்து
கொள்ளலாம்-
**'சண்யோ கோப்பி அன்கூல் பார்'**
No: 16. நவீன சந்தைக் கட்டிடம், சுன்னுகம்.

**துர்க்கா அச்சகம்**
கே- கே- எஸ்- வீதி, இணுவில்.

இயந்திர உப உறுப்புக்கள் விற்பனையாளர்கள்.
● **நியூ லிங்கம் ஸ்ரோர்ஸ்** ●
கே- கே எஸ்- வீதி. சுன்னுகம்.

சகல விதமான அழகு சாதனப் பொருட்கள்,
அன்பளிப்புப்பொருட்கள் எவர்சில்வர் பாத்திரங்கள்
மற்றும் எல்லா விதமான பொருட்களுக்கும்
நம்பிக்கையான ஸ்தாபனம்.
**பஷன் ஹவுஸ்**
65, கே. கே. எஸ். வீதி. யாழ்ப்பாணம்.

சிறந்த இயந்திர உபகரணங்களும். மின்சார
உபகரணங்களும், இறக்குமதியாளர்களும்
விற்பனை செய்பவர்களும்.
**V. T. R. சிங்கம்ஸ்**
7, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
118, 2 ஆம் குறுக்குத்தெரு, கொழும்பு 11.

நவநாகரிக டிசைன்களிலான தங்க ஆபரணங்களுக்கு
சிறந்த ஸ்தாபனம். ஓடர் நகைகள் உத்தரவாதத்துடன்
செய்து கொடுக்கப்படும்.
**கோபால் ஜுவல்லர்ஸ்**
82/5, கஸ்தூரியார் வீதி. யாழ்ப்பாணம்.

**குறாஸ் ரெக்ஸ்ரைல்ஸ்**
52, நவீன சந்தை,
சுன்னுகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆறு அணிகள் பங்கெடுக்கும்
# நேரு கிண்ண கிரிக்கெட்

## ஆஸ்திரேலிய - மேற்கிந்திய அணி முடிவுகளில் மாற்றம்

புதுடில்லி, ஆக. 14
இந்தியப் பிரதமர் ஜவகர்லால் நேருவின் 100 ஆவது பிறந்த தினத்தை முன்னிட்டு இந்தியாவில் நடத்தப்படவுள்ள நேரு கிண்ணத்துக்கான ஒரு நாள் கிரிக்கெட் போட்டியில் கலந்து கொள்வதற்கு டெஸ் அந்தஸ்தைப் பெற்றுள்ள ஆறு நாடுகள் இணக்கம் தெரிவித்துள்ளன.

இவ்வாறு நேற்று முன் தினம் நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாடு ஒன்றில் இப் போட்டியை ஒழுங்கு செய்துள்ள குழுவின் தலைவர் தெரிவித்தார்.

இந்தியா உட்பட பாகிஸ்தான், இலங்கை, இங்கிலாந்து மேற்கிந்திய தீவுகள், ஆஸ்திரேலியா ஆகிய நாடுகளே இப் போட்டியில் கலந்து கொள்ளவுள்ளன.

அக்டோபர் மாதம் 26 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள இப் போட்டியில் நியூசிலாந்து கலந்து கொள்ளவில்லை. இதற்கான காரணங்கள் எதுவும் தெரிவிக்கப்படவில்லை.

கனடாவில் நவம்பர் மாதம் 5 ஆம் திகதி நடைபெறவுள்ள காட்சிப் போட்டி காரணமாக மேற்கிந்தியதீவுகள் அணியும், உள்நாட்டுப் போட்டிகள் காரணமாக ஆஸ்திரேலிய அணியும் இப்போட்டியில் பங்கு பற்றவில்லை என முன்னர் அறிவித்திருந்தது தெரிந்ததே.

இப் போட்டியில் கலந்து கொள்ளும் படசத்தில் கனடாவில் நடைபெறவுள்ள போட்டிக்கு இசைவாக மேற்கிந்திய தீவுகள் அணியினது போட்டி அட்டவணையை அமைப்பதுடன், இந்த அணி இந்தியாவிலிருந்து கனடா சென்று திரும்புவதற்கான போக்குவரத்து செலவுகளையும் பொறுப்பேற்பதாக இந்திய போட்டிக் குழு முன்னர் அறிவித்திருந்தது - இதனை அடுத்தே மேற்கிந்திய அணி தமது முடிவை மாற்றியுள்ளதாக நம்பப்படுகிறது. ஆஸ்திரேலிய அணி மீண்டும் பங்குபற்றுவதற்கான காரணங்கள் பற்றி இந்தச் செய்தி எழுதும் வரை அறியவரவில்லை. (த-6)

விளையாட்டு அரங்கு

★ அந்தியகால சேவையில் முதிர்ச்சி பெற்றவர்களது நவீன ஸ்தாபனம்!
★ குடாநாட்டில் சகல கிராமங்களுக்கும் எமது சேவை விரிவாக்கம் செய்யப்பட்டுள்ளது
★ பிறைற் ஹவுஸ் ★
(புனித யாகப்பர் ஆலய அருகில்)
210, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
(3287)

வெளிநாட்டுப் பயணம்
★ அவுஸ்திரேலியா (Australia)
பயணம் செய்ய விரும்புவோருக்கு 20.08.89 இல் பயண ஒழுங்கு செய்து தரப்படும்.
★ சிங்கப்பூர்
20 தாதிமார் (Nurse) தேவை.
சம்பளம் 15,000/-
★ ஜேர்மனி
மற்றும் வேலை வாய்ப்புகளுக்கும் 14 ஆம், 15 ஆம் திகதிகளில் சந்திக்கவும்.
தொடர்பு:
திரு. க. இந்திரலிங்கம் (சந்திரன்)
நிரோஷன் என்ரபிறைஸ்
பருத்தித்துறை வீதி, மயிலிட்டி
காங்கேசன்துறை
(T. B. வைத்திய சாலைக்கு அருகில்)
(1489)

ஓராண்டு நினைவஞ்சலி



கஸ்பார் ஞானம்மா

மண்ணில்: 01 — 04 — 1906
விண்ணில்: 14 — 08 — 1988

அம்மா நீங்கள் எம்மையும், மண்ணையும் பிரிந்து இன்றோடு ஓராண்டு ஓடி மறைந்த போதும் நாளும் பொழுதும் உம்மை நினைத்தவுடன் எம் கண்கள் நீரைச் சொரிகிறதே!

உங்கள் ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்!
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

இல. 11 சென். செபஸ்ரியன் வீதி,
யாழ்ப்பாணம்.

[ரி 7460]

### வட்டிச் சலுகை

மாங்குளம், ஆக. 14
அடைவு நகைகளை குறைந்த வட்டிச் சலுகையில் மீளப் பெற மீண்டும் சந்தர்ப்பம் வழங்கப் பட்டுள்ளது.

அரசு அறிமுகம் செய்த குறைந்த வட்டிச் சலுகை தொடர்ந்தும் நீடிக்கப்படமாட்டாதெனவும், இதனைப் பயன்படுத்தி அடைவு நகைகளை உடன் பெற்றுக்கொள்ளுமாறும்; இதற்கான கடைசி திகதி 31. 9. 89 எனவும் மக்கள் வங்கியிலிருந்து தெரிய வந்துள்ளது.

(க-94)

### வல்வை மக்களுக்கு உதவி

யாழ்ப்பாணம், ஆக. 14
வல்வையில் அசம்பாவிதங்களால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு யாழ் செஞ்சிலுவைச் சங்கம் பல உதவிகளை வழங்கியுள்ளது.

உடனடி உதவியாக உணவுப்பொருள்கள், மருந்து வகைகள் ஆகியவற்றை இச் சங்கத்தின் குழு அங்கு சென்று வழங்கியுள்ளது.

(க- 3)

### ஆசிய மெய்வல்லுனர் போட்டிகள்

புதுடில்லி, ஆக. 14
நவம்பர் மாதத்தில் நடைபெறவுள்ள ஆசிய மெய்வல்லுனர் போட்டிகளில் சீனா, பாகிஸ்தான், நேபாளம், இலங்கை உட்பட 40 நாடுகள் பங்கு பற்றும் என எதிர்பார்க்கப் படுகின்றது.

புதுடில்லியிலுள்ள ஜவகர்லால் நேரு விளையாட்டரங்கில் நடைபெறவுள்ள இப் போட்டியில் மொத்தமாக 42 மெய்வல்லுனர் நிகழ்ச்சிகள் நடைபெறவுள்ளன.

ஆண்களுக்கான 23 நிகழ்ச்சிகளும் பெண்களுக்கான 19 நிகழ்ச்சிகளும் இப் போட்டியில் இடம்பெறும். (த 6)

# முல்லைத்தீவில் நிவாரணம் வழங்கும் நடவடிக்கை ஆரம்பம்

மாங்குளம், ஆக. 14
முல்லைத்திவு மாவட்டத்தில் வன்செயல்களால் சேதமடைந்த வீடுகளை புதுப்பிப்பதற்கு அல்லது திருத்தி அமைப்பதற்கு நிவாரணம் வழங்கும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப் பட்டுள்ளன.

தற்போது நிவாரணம் வழங்கும் நடைமுறை முன்னைய நடைமுறையிலும் பார்க்க வித்தியாசமானது.

இதற்கான உதவி கட்டடப் பொருள்களாக அல்லது பணமாக கட்டட அமைப்பு முன்னேற்றத்தைப் பொறுத்து வழங்கப்படவுள்ளது.

கடந்த 9ஆம் திகதி துணுக்காய் பாடசாலையில் நடந்த நடைமுறை விளக்கக் கூட்டத்தில் உரையாற்றிய முல்லைத்தீவு அபிவிருத்தி அதிகார சபை மாவட்ட முகாமையாளர் திரு. கே.ரி.எம். விஜயகுமார் மேற்கண்டவாறு தகவலைத் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் துணுக்காய் உதவி அரசாங்க அதிபர் திரு. இ. கிருஷ்ணபிள்ளை தலைமை வகித்தார்.

மாவட்ட முகாமையாளர் தொடர்ந்து பேசுகையில், 'இந்த உதவி பெற விரும்புவோர் கட்டட வேலைகளை ஆரம்பிப்பதற்கான விருப்பு வங்கிக்கணக்கு விவரம் ஆகியவை உள்ளடக்கிய விவரங்களைக் கொண்ட விண்ணப்பத்தை தங்கள் பகுதி உதவி அரசாங்க அதிபருக்குச் சமர்ப்பிக்க வேண்டும்'' என்றார்.

(க 94)

### மாங்குளம் மக்கள்வங்கி

## மீளக்குடியமர்தல் நிவாரண வேலை பூர்த்தி அடைகிறது

மாங்குளம் ஆக 14
மாங்குளம் மக்கள் வங்கி மூலம் வழங்கப்பட்டு வரும் மீளக்குடியமர்தல் நிவாரணம் வழங்கும் பணி முடிவடைந்து வருகின்றது.

புதுக்குடியிருப்பு துணுக்காய், பாண்டியன் குளம் உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் உள்ள மக்களுக்கு மீளக்குடியமர்தல் நிவாரணம் வழங்குவதற்காக 225 இலட்சம் ரூபா ஒதுக்கப்பட்டு ஒதுக்கப்பட்ட பணம் உரியவர்களுக்கு வழங்கப்பட்டு முடிவடைந்து வருகிறது.

இவ்வங்கியில் குறைந்தளவு உத்தியோகத்தர்கள் இருந்த போதிலும் அவர்களது அயராத ஒத்துழைப்பால் நிவாரணம் வழங்குவது துரிதமடைந்து வருகிறது.

எதிர் வரும் புதன்கிழமை 16ஆம் திகதி மாங்குளம் கிராம சேவகர் பிரிவு மக்களுக்கும், இதுவரை தகுதி இருந்தும் பெற்றுக் கொள்ளாதவர்களுக்கும் இறுதி நாளாக இருப்பதாகவும் உரியவர்கள் தவறவிடாது மேற்குறித்த தினத்தில் பணத்தைப் பெற்றுக் கொள்ளத் தவறின் முல்லைத்தீவு அரசாங்க அதிபருக்கு பணம்திருப்பி அனுப்பப்பட இருப்பதாகவும், ஆகவே இறுதிச் சந்தர்ப்பத்தை பயன்படுத்துமாறும் மாங்குளம் மக்கள் வங்கி முகாமையாளர் திரு. கங்கசிவம் வேண்டுகோள் விடுத்துள்ளார். (இ-94)

### விலங்குணவுத் தொழிற்சாலை

வடக்கு-கிழக்கு மாகாண காணிவிவசாய அமைச்சின்கீழ் இயங்கும்கால்நடை அபிவிருத்தித் திணைக்களம் திருமலை, மட்டக்களப்பு, வவுனியா ஆகிய மாவட்டங்களில் விலங்குணவுத் தொழிற்சாலைகளை அமைக்க துரித நடவடிக்கைகள் எடுத்து வருவதாக மாகாண காணி, விவசாய புனர்வாழ்வு அமைச்சர் தெரிவித்தார்.

வடக்கு - கிழக்குமாகாண - 1990 ஆம் ஆண்டு விலங்குணவில் தன்னிறைவு காணவேண்டும் என்பதே தமது அமைச்சின் குறிக்கோள் என்று தெரிவித்த அமைச்சர் யாழ்-திருநெல்வேலியில் இயங்கும் விலங்குணவுத் தொழிற்சாலையைப் போன்று பணித்தியாலயத்திற்கு 2 தொன் உற்பத்தி இயலளவைக் கொண்டதாக இத்தொழிற்சாலைகள் அமையும் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

## கணுக்கேணி ஷெல் வீச்சில் காயம் அடைந்தோர்

மாங்குளம் ஆக 14
முள்ளியவளை கணுக்கேணிப் பகுதியில் இடம்பெற்ற ஷெல் தாக்குதலின்போதுகாயமடைந்தவர்கள் விவரம்:

திரு. இ. யோகலிங்கம் (வயது 29), யோகபுரம்கிழக்கு கிராம சேவை உத்தியோகத்தர் திரு. ந இரங்கநாதன் (வயது 27), ஆசிரியர் திருமதி ந. தங்கம்மா (வயது 55),

திரு. ந. கருணாகரன் (வயது 23], யாழ். பலகலைக்கழக மாணவன் திரு. ந சிறீதரன் (வயது 20], மாணவன்

செல்வி நடராசா ரூபராணி [வயது 18] மாணவி, திரு: ஈஸ்வரன் [வயது 24] யாழ்பல்கலைக்கழக மாணவன்,

திரு: பொ. நடராசா, [வயது 66]

காயமடைந்ததிரு ந. கருணாகரன் குடும்பத்தில் ஐவர் காயமடைந்தனர் இவர்கள் அவசர சிகிச்சைக்காக முல்லைத்திவு யாழ்ப்பாணம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் இச்சமபவம் கடந்த 25 ஆம்திகதி முள்ளியவளை கணுக்கேணிப்பகுதியில் இடம் பெற்றது.

இ-94]

## ஜீ. சி. ஈ. சாதாரணதர பரீட்சைக்கு 8 பாடங்கள்

### 2 விருப்புக்குரிய பாடங்கள்

யாழ்ப்பாணம், ஆக 14
இம்முறை நடைபெறவுள்ள ஜீ சி ஈ சாதாரணதரப் பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்திகள் 8 பாடங்களுக்குத் தோற்றவேண்டும்.

இதில் ஆறு கட்டாயபாடங்களாகவும் இரண்டு விருப்புக்குரிய பாடங்களாகவும் அமையும்.

சமயம், மொழியும் இலக்கியமும், ஆங்கிலமொழி, விஞ்ஞானம், கணிதம், வரலாறும் சமூகக்கல்வியும் என்பன கட்டாய 6 பாடங்களாகும்.

அழகியல் கல்வி, ஏனைய மொழிகள், தொழில் நுட்பப் பாடம்கள் என்பன விருப்புக்குரிய பாடங்களாக அமைகின்றன.

அழகியல் கல்வியில் சித்திரம், நடனம், சங்கீதம் ஆகிய பாடங்களும் ஏனைய மொழிகளில் பாளி, சமஸ்கிருதம், அரபுஆகிய பாடங்களும் உள்ளன.

தொழில் நுட்பப் பாடங்களாக மரவேலை, விவசாயம் நெசவு, தையல்வேலை, மனைப் பொருளியல், வர்த்தகம், சுருக்கெழுத்தும் தட்டெழுத்தும் உள்ளன.

பரீட்சை எழுதும் பாடசாலைப் பரீட்சார்த்திகள் இம்முறை — தமிழ் அல்லது சிங்களத்தினையே ஊடக மொழியாகக்கொண்டு பரீட்சை எழுத வேண்டும். ஆங்கிலத்தில பரீட்சை எழுத முடியாது என பரீட்சைத் திணைக்களம் அறிவித்துள்ளது.

போனதடவை ஆறு பாடங்களுக்குப் பரீட்சை எழுதிய பரீட்சார்த்திகள் இம்முறை இரண்டாம் தடவையாக எடுக்கும்போது 8 பாடங்களுக்குத் தோற்றவேண்டும்.

(த-76)

### தெய்வவாத்தியம்

(5ஆம் பக்கத் தொடர்ச்சி)

தேவாதிதேவர்களும் வாசஞ் செய்கின்றனர் என்பது சாஸ்திர சம்பிரதாயம். இந்த வகையில் சைவர்களுக்குப் பிரதானமானதாகக் கொள்ளப்படும் மிருதங்க வாத்தியத்தை ஈழத்தில் பலரும் பேணிக் காத்து வருகிறார்கள்.

இந்த வரிசையில் எமது உறவினரும், சங்கீதப்பிரியருமான நாராயணசுவாமி சிவாசாரியர் புத்திரன் சோமாஸ்கந்த சர்மா புதுமையாக மிருதங்க சங்கீதத்தை வளர்த்து வருகின்றார். அவ்விசை புதுமெருகுடன் நன்றாகப் பரவ வேண்டும் என்பதற்காக இவர் ஆற்றும் தொண்டுகள் பாராட்டுதற்குரியவை.

மிருதங்கமணி எம். என். செல்லத்துரையின் மாணவனாக ஆரம்பித்து இன்று மிருதங்க சங்கீத சாஸ்திர நூல் ஒன்றை வெளியீடு செய்யும் அளவிற்கு இறைவன் இவருக்கு அளித்துள்ள தெய்வீகத் திருவருளை வார்த்தைகளால் கூற இயலாது.

பல இடர்களும் தொல்லைகளும், சிரமங்களும் கூடிய இக்காலகட்டத்திலே இப்படியானதோர் அரிய செய்கை பாராட்டுக்குரியது. நா. சோமாஸ்கந்த சர்மாவிற்கு மாவை முருகப்பெருமானின் திருவருள் நிரம்ப கிடைக்க வேண்டுமென இவ்விடத்தில் பிரார்த்திக்கின்றோம்.

### நோராட் உதவி

மட்டக்களப்பு, ஆக. 14
மட்டக்களப்பு பொதுவைத்தியசாலையில் சகல கிளினிக்குகளையும் உள்ளடக்கிய 3 மாடி கட்டிடத் தொகுதியொன்று நோராட் உதவியுடன் அமைக்கப்படவுள்ளது.

நோராட் நிறுவனம் புனர்வாழ்வு, புனரமைப்பு திட்டத்தின் கீழ் வழங்கும் நிதியுதவி இதற்கு பயன்படுத்தப்படும்.

ஏற்கனவே வைத்தியசாலை புனரமைப்புக்கு 30 இலட்சம் ரூபா வழங்கியுள்ள நோராட் மேலும் 20 இலட்சம் ரூபா வழங்குவதாக அறிவித்துள்ளது.

## தனிநபர் கொலைகள் பற்றி ரெலோ பிரமுகர் விளக்கம்

யாழ்ப்பாணம், ஆக 14
1986 ஆம் ஆண்டுக்குப் பின் 1988 ஆம் ஆண்டு மீண்டும் யாழ் நகரில் காரியாலயங்களைத் திறந்து மக்களிடையே யுள்ள எமக்கெதிரான தப்பான அபிப்பிராய பேதங்களைக் களைந்து சேவை மனப்பான்மையுடன் செயற்பட்டோம் எந்தவொரு நபருக்கெதிராகவும் எமது பிழைகளைச் சுட்டிக்காட்டுபவருக்கெதிராகவும் எமது துப்பாக்கிசுட்டதில்லை. இன்றுகூட எம்மைப் பற்றி உணராதவர்கள் இருப்பதைக் கண்டு நாம் மனவேதனையடைகின்றோம். வெகுவிரைவில் எமது குறைபாடுகளை நிவர்த்தி செய்வோம்'.

ஈழ விடுதலை இயக்கத்தைச் சேர்ந்த திரு. வை. கி. செந்தோழன் தமது ஆதரவாளர்கள் மத்தியில் உரையாற்றுகையில் இவ்வாறு கூறினார்.

தனிநபரைப் படுகொலை செய்யும் எந்தச் சக்தியையும் நாம் வன்மையாகக் கண்டிப்பதுடன் கோண்டாவிலில் இனந்தெரியாதவர்களால் சுடப்பட்டு மரணமடைந்த ராசன் என்பவரின் குடும்பத்திற்கு எமது ஆழ்ந்த கவலையையும் தெரிவிக்கிறோம் என்று தமிழ் ஈழவிடுதலை இயக்கத்தின் சார்பில் திரு. செந்தோழன் கூறினார்.

### மனித உரிமை மீறல்

வல்வெட்டித்துறைச் சம்பவங்கள் பற்றி வெளியான தகவல் உண்மையானதாக இருப்பின், அது மனித உரிமை மீறலாகும்;

—இப்படி வெளியுறவு அமைச்சர் ரஞ்சன் விஜேரத்தின தெரிவித்தார் என்று பி.பி.சி நேற்று முன் தினம் அறிவித்தது. (உ- எ)

# பனை அபிவிருத்திதலைமை அலுவலகம் யாழ்ப்பாணத்தில் அமையவேண்டும்

### சீவல் தொழிலாளர் கூட்டத்தில் உரை

யாழ்ப்பாணம், ஆக. 14
நாட்டின் சகல பகுதிகளிலும் இலட்சக் கணக்கில் செறிந்து வளர்ந்துள்ள பனை வளத்தை அழிந்து போகாது பாதுகாக்கவும், அதை மேலும் வளர்த்து எடுக்கவும், இந்த அரசோ அல்லது அதனால் உருவாக்கப்பட்ட பனை அபிவிருத்திச் சபையோ, எந்தவிதமான உருப்படியான நடவடிக்கைகளும் இதுவரை மேற்கொள்ளவில்லை. பெயரளவில் ஒரு சில உற்பத்திகளை செய்துவிட்டு பத்திரிகைகளில் விளம்பரம் செய்வதன் மூலம் மட்டும், அது எதனையும் சாதித்துவிட்டதாக நாம் கொள்ள முடியாது.

சாவகச்சேரி தெய்வேந்திரா படமாளிகையில் நூற்றுக்கணக்கான சீவற் தொழிலாளர்கள் கலந்து கொண்ட கூட்டத்தில் ஈழத் தொழிற்சங்கச் சம்மேளத்தின் அமைப்பாளர் திரு. அ. இராசலிங்கம் அவர்கள் பேசும்போது இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து பேசும் போது '' ஆண்டுதோறும் அரசாங்கமும், வெளிநாட்டு நிதி நிறுவனங்களும், பல இலட்ச ரூபாய்களை பனை அபிவிருத்திச் சபைக்கு வழங்கி இருந்தன; ஆனால் அவை யாவும் சரியான முறையில் பயன்படுத்தப்படவில்லை. பல இலட்ச ரூபாய்களைச் செலவு செய்து கைதடியில் பனை ஆராய்ச்சிக்கானகட்டடத்தை நிறுவியிருந்தும் அது முழுமையாகப் பூர்த்தி செய்யப்படவில்லை. மேலும் பல ஆயிரக்கணக்கான ரூபாய்களைச் செலவு செய்து வல்லிபுரக் கோயிலப் பகுதியிலும், வன்னிப் பகுதியிலும் காணிகளை வாங்கிவிட்டிருக்கிறார்களே அல்லாமல், அவற்றிலிருந்து இதுவரை எதுவித நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படாததினால், அவை பயனற்றுக் கிடக்கின்றன என்று கூறினார்.

இதையடுத்துப் பேசிய சாவகச்சேரி தெ. ப. பொ. உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் திரு: பொ. சின்னராசா பேசும் போது இன்று நாடு இலங்கை அரசின் இராணுவ நடவடிக்கைகளாலும், வேறு பல நெருக்கடிகளாலும் தெ: ப: பொ. கூட்டுறவுச் சங்கங்களும் அது சார்ந்த தொழிலாளர்களும், ஊழியர்களும் மிகவும் பாதிக்கப்பட்டு நலிவடைந்துள்ளார்கள் என்பதை மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட வடகிழக்கு மாகாண அரசிற்கும், அதன் முதலமைச்சருக்கும் நாம் வலியுறுத்திக் கூறியதோடு எம்மால் அவரிடம் ஒரு மகஜரும் கையளிக்கப்பட்டது. இதற்கு முதலமைச்சர் தொழிலாளர்களுக்கான தொழில் ஊக்குவிப்பு நிவாரணமாக ரூபா 4000/- (நாலாயிரம்) வழங்குவதாயும், ஊழியர்களின் தொழில் பாதிப்பு நிவாரணமாக ரூபா 4000/- (நாலாயிரம்) வழங்குவதாயும் மற்றும் சங்கங்களின் பாவனைக்கு வாகனங்கள் வழங்குவதாயும் ஒத்துக் கொண்டார். ஆனால், இன்று மாதங்கள் பல கழிந்தும் அவை வழங்கப்படாமையால் தொழிலாளர்களும் ஊழியர்களும் மிகுந்த மனவிரக்திக்கு ஆளாகியுள்ளார்கள். ஆகவே இது விடயங்களில் ஈழத்தொழிற்சங்க சம்மேளனம் கவனத்திற் கொண்டு, அவற்றை பெற்றுத்தர நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொண்டதோடு, இக் கூட்டம் தமது குறைபாடுகளை மாகாண அரசிற்கு தெரிவிப்பதற்கு ஒரு அரிய சந்தர்ப்பத்தை தந்துள்ளது என்றார்.

பனைவளம் மிக்க எமது பிரதேசத்தின் பட்டினமாம் யாழ்ப்பாணத்தில் பனை அபிவிருத்தி தலைமைக் காரியாலயம் அமையவேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

இதையடுத்து பொதுச் சபையால் ஐக்கிய சீவல் தொழிலாளர் சங்க நிர்வாக சபை ஒன்றும், தேர்ந்தெடுக்கப்பட்டு ஏகமனதாக ஏற்றுக் கொள்ளப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மனித முகத்துடன் பாம்பு

இஸ்லாமபாத், ஆக. 13
மனித முகத்துடன் கூடிய பாம்பு ஒன்று பாகிஸ்தானில் பிடிக்கப்பட்டிருக்கிறதாம்.

'த நேஷன்', ஆங்கில நாளிதழ் இந்தச் செய்தியை வெளியிட்டுள்ளது.

இஸ்லாமபாத்தில் இருந்து 10 கிலோ மீற்றர் தூரத்தில் உள்ள நகர் ஒன்றில பாம்பாட்டி அன்வர் ரங்கிலா எனபவர் இந்தப் பாம்பைப் பிடித்தார்.

பாம்பின் தலை மனித முகமாகக் காணப்படுகிறது. பாம்பின் சத்தமும் ஏனைய பாம்புகளைப் போன்று இல்லை.

இந்த அபூர்வ பாம்பு பற்றி ஆறு மாதங்களுக்கு முன்னர் எனக்குத் தகவல் கிடைத்தது.
— இப்படி பாம்பாட்டி ரங்கிலா தெரிவித்தார். (உ-எ)

● நூறு சடலங்கள் மீட்பு:

# அஸாம் இன மோதலில் இருநூறு பேர் பலி; அருணசல பிரதேசத்தில் அகதிகள் தஞ்சம்!

## பிரபுல்லா மஹந்தா அரசு கலைக்கப்படும் ஆபத்து

கௌஹாத்தி, ஆக. 13
அஸாம் மாநிலத்தில் 'போடோ இன நாடு' கோரிப் போராடிவரும் போடோ இனத்தவருக்கு எதிராக அஸாம் இனத்தவர் நடத்திய தாக்குதலில் 100க்கு அதிகமானோர் கொல்லப்பட்டனர்.

சுமார் 20க்கு அதிகமான போடோ இன மக்கள் வாழும் கிராமங்கள் முற்றாக அழிக்கப்பட்டு விட்டன.

சுமார் 60 ஆயிரம் போடோ இனமக்கள் அருணசல பிரதேசத்தில் தஞ்சமடைந்தனர்.

**இராணுவம் விரைவு**

இனமோதலைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர மத்திய அரசு இராணுவத்தை அஸாமிற்கு அனுப்பி வைத்திருக்கிறது.

'போடோ தனி நாடு' கோரும் போடோ இன மக்களுக்கு எதிரான நடவடிக்கையாக இப்படுகொலை கருதப்படுகிறது.

உயிரிழந்தோரில் பெண்கள் மற்றும் குழந்தைகளும் அடங்குவர்.

உள்ளூர் அரசியல் கட்சி ஒன்றின் அலுவலகம் மீது போடோ இனத் தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலைத் தொடர்ந்தே இந்த இனமோதல் ஏற்பட்டது. அப்போது பத்து அஸாம் இனத்தவர் கொல்லப்பட்டனர்.

**உயிருடன் எரிப்பு!**

அதைத் தொடர்ந்து அஸாம் வாசிகள் போடோ இனத்தவரைப் பிடித்து உயிரோடு எரித்தனர்.

இதுவரை 100க்கு அதிகமான போடோ இனத்தவரின் சடலங்கள் கண்டெடுக்கப்பட்டன.

**30 சத விதமானோர் போடோ இனத்தவர்**

கொல்லப்பட்டவர்களின் எண்ணிக்கை 200க்கு அதிகமாக இருக்கலாம் என்று தெரியவருகிறது.

அரசு அகதி முகாம்களில் 6 ஆயிரத்துக்கு அதிகமான போடோ வாசிகள் தங்கியுள்ளனர்.

அஸாம் மாநில சனத்தொகையில் 30 சத விதமானோர் போடோ இனத்தவர் ஆவர்.

**20 வருடப் போராட்டம்**

மங்கோலிய வம்சாவழியினரான போடோ இன மக்கள் கடந்த 20 ஆண்டுகளாக தனி நாடு கோரி போராடி வருகின்றனர்.

அண்மைக் காலமாக அவர்களின் போராட்டம் தீவிரமடைந்து வருகிறது.

அஸாம் மாநில அரசு தற்போது எதிர்க் கட்சியான அஸாம் கணபரிஷத் கட்சியின் கைகளில் உள்ளது.

தேசிய முன்னணியில் அஸாம் மாநில முதலமைச்சர் பிரபுல்லா மஹந்தா முக்கிய இடம் வகிக்கிறார்.

அஸாமில் சட்டம், ஒழுங்கு கெட்டுவிட்டது என்று கூறி மஹந்தா அரசை மத்திய அரசு கலைத்து விடக்கூடிய நிலை இந்த இனமோதலைத் தொடர்ந்து தீவிரமடைந்து இருப்பதாக புதுடில்லிச் செய்திகள் தெரிவிக்கின்றன. (எ)

## அ. தி. மு. க ஓட்டைப்படகு சத்தியவாணிமுத்து பேச்சு

சென்னை, ஆக. 13
மீண்டும் தி. மு. கவில் சேர்ந்துகொண்ட முன்னாள் அ. தி. மு. க அமைச்சர் சத்தியவாணி முத்து, முதலமைச்சர் கருணநிதி முன்னிலையில் உறுப்பினர் விண்ணப்பத்தில் கையொப்பமிட்டார்.

அப்போது திருமதி சத்தியவாணிமுத்துசொன்னதாவது;

எம் ஜி ஆர் மறைந்ததும் அ தி மு க ஓட்டைப் படகாக எரிந்த வீடாக மாறிவிட்டது. அங்கு இருப்பவர்கள் சுயநலக்கும்பலாகிவிட்டனர்.

அங்கு தமிழ் அசிங்கமாகி விட்டது. அப்படிப்பட்ட கும்பலில் நான் இருக்கவில்லை. ஆகவே தான் மீண்டும் கலைஞர் அணியில் சேர்ந்துள்ளேன்—

இப்படி திருமதி சத்தியவாணிமுத்து தெரிவித்தார். (எ)

## தொடரும்லெபனான்மோதல் மேலும் 25 பேர் மரணம்

பேருட், ஆக 13
நான்காவது தினமாக சிரிய படைகள் பேருட்டில் கிறிஸ்தவப்பகுதிமீது ரொக்கெட் மற்றும் ஷெல் தாக்குதல்களை நடத்தின.

அப்போது 25க்கு அதிகமானோர் கொல்லப்பட்டனர்.

இக்குறித்து ஐ நா பாதுகாப்புச்சபை நேற்றுக் கூடி ஆராய்ந்தது—

இதேவேளை—

மோதலை நிறுத்தும் முயற்சியில் பிரெஞ்சு அரசு ராஜதந்திர ரீதியில் ஈடுபட்டுள்ளது. (எ)

## தமிழனின் தலையாய பணி ஆலடி அருணா விளக்கம்

சென்னை, ஆக. 13
தமிழ்நாட்டு மக்கள் நடிகர் சங்கத் தேர்தலை எதிர்நோக்கவில்லை. ஆகவே ஜெயலலிதாவா, ஸ்ரீதேவியா என்ற பிரச்சினை எழவேண்டிய அவசியமில்லை.

மீண்டும் தி. மு. கவில் சேர்ந்துகொண்ட முன்னாள் அ. தி. மு. க. எம். பி. ஆலடி அருணா முன் கண்டவாறு தெரிவித்தார்.

காலத்தின் கட்டாயம் என்பது மதுமயக்கத்திலும் மாத்திரை போதையிலும் உறங்கிக் கொண்டிருக்கும் ஒரு நடிகையின் நிலைமையை ஏற்பது என்பது அல்ல. அதன் அடித்தளத்தையே தாக்கி, தகர்ப்பதுதான் தன்மானமுள்ள ஒவ்வொரு தமிழனின் தலையாய கடமையாகும்.

இப்படி ஆலடி அருணா சொன்னார். (எ)

## இந்துமகா சமுத்திரத்தில் அமெ. போர்க்கப்பல்

### வாஷிங்டனில் விவரம் வெளியிட மறுப்பு

நியூயார்க், ஆக 13
இந்துசமுத்திரத்தில்வழமையான இராணுவ நடவடிக்கைகளை அமெரிக்க விமானந்தாங்கிக் கப்பல் 'யுஎஸ்எஸ் அமெரிக்கா' மேற்கொண்டிருப்பதாக அறிவிக்கப்பட்டது.

இத்தகவலை வாஷிங்டனில் பாதுகாப்பு அமைச்சுப் பேச்சாளர் ஒருவர்வெளியிட்டார்.

இதுபற்றிய விவரங்களை வெளியிட அந்த அதிகாரி மறுத்துவிட்டார்.

இந்து சமுத்திரத்தில் எந்தப்பகுதியில் அமெரிக்கக் கடற்படைப் போர்க்கப்பல்கள் ஈடுபட்டுள்ளன என்ற கேள்விக்குப் பதிலளிக்கமுடியாது என்றும் அந்த அதிகாரி தெரிவித்தார். (எ)

## ஐ. நா. வின் சமரச முயற்சி குறித்து கம்போடிய நிலை

நொம்பென், ஆக. 13
ஐ. நா வில் கம்போடியாவுக்கான இடம் காலியாக இருப்பதாக அறிவிக்கப்படும் வரை, கம்போடியப் பிரச்சினைக்குத் தீர்வுகாணும் முயற்சிகளில் ஐ. நா. ஈடுபடக் கூடாது.

கம்போடியப் பிரதமர் ஹுன்சென் இத் தகவலை நேற்று வெளியிட்டார்.

ஐ நா குழுவுடன் பேச்சுக்கள் நடத்திய பின்னர் பிரதமர் ஹுன்சென் செய்தியாளர்களைச் சந்தித்தார்.

பொல்பொட் குழுவுக்கு ஐ. நா. ஆதரவு அளிப்பதை நிறுத்த வேண்டும் என்றும் திரு. ஹுன்சென் தெரிவித்தார். (எ)

## அமெரிக்க முப்படைத்தளபதி கறுப்பு இனத்தவர்

வாஷிங்டன், ஆக. 13
அமெரிக்க முப்படைகளின் பிரதம தளபதியாக கறுப்பு இனத்தவரான ஜெனரல் கொலின் பவல் அதிபர் ஜோர்ஜ் புஷ்ஷினால் நியமிக்கப்பட்டார்.

முன்னாள் அதிபர் றேகனின் தேசிய பாதுகாப்பு ஆலோசகராக இவர் முன்னர் பணியாற்றினார்.

முப்படைகளின் தளபதியாக பணிபுரியும் முதலாவது கறுப்பு இனத்தவர் இவரே. 52 வயதான இவரின் நியமனத்தை அமெரிக்க செனட் இனித்தான் அங்கீகரிக்கவேண்டும். (எ)

## ஒலிபரப்பு நேரம் நீடிப்பு

புதுடில்லி, ஆக. 13
இலங்கைக்கான இந்திய வானொலி ஒலிபரப்புநேரம் மேலும் 15 நிமிடங்களால் நீடிக்கப்படுகிறது.

இத்தகவலை மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை அமைச்சர் எ.கே.எல். பகத் வெளியிட்டார்.

தற்போது இந்த ஒலிபரப்பு 12 மணி நேரம் நடந்து வருகிறது. (த-எ)

# 'விஸ்வாமித்ரர்' நிலையில் மாநில அரசு 'கன்வரிஷி'யாக மத்திய அரசு!

## ராஜ்ய சபையில் வர்ணனை

புதுடில்லி, ஆக. 13
ஆந்திரமாநில அரசு 'விசுவாமித்ர மகரிஷி' போன்று நடந்து கொள்வதாக ராஜ்ய சபாவில் மத்திய எரிசக்தி அமைச்சர் வசந்த் சாத்தே குற்றஞ்சாட்டினார்.

ஆந்திர மாநில அரசுக்கான நிதி ஒதுக்கீடு பற்றிய விவாதத்தின் போது இக்குற்றச்சாட்டு சுமத்தப்பட்டது.

அமைச்சர் சாத்தே சொன்னதாவது;

மகரிஷி விசுவாமித்ரர் போல ஆந்திர அரசு நடந்து கொள்கிறது.

விசுவாமித்ரர் மேனகையுடன் தொடர்பு கொண்டதால் சகுந்தலை பிறந்தாள். பின்னர் விஸ்வாமித்ரர்மகளைக் கைவிட்டு விட்டு மீண்டும் துறவு நிலைக்குச் சென்றுவிட்டார்.

சகுந்தலையை கன்வரிஷிதான் வளர்த்து ஆளாக்கினார்.

இது போன்றே திரு. ராமராவ் தலைமையிலான ஆந்திர மாநில அரசும் வளர்ச்சிப் பணிகளைத் தொடக்கி விட்டு இடை நடுவில் கைவிட்டு விடுகிறது.

அப்படி அனாதையாக விடப்படும் திட்டங்களை கன்வரிஷி போன்று மத்திய அரசு பொறுப்பெடுத்து நிறைவேற்ற வேண்டியுள்ளது.

'கைவிடப்படும் திட்டங்கள் கன்வரிஷி போன்று பொறுப்பு எடுப்போம்.'

ஏ. ஜி. குல்கர்ணி, எம். பி; 'அப்படிச் சொல்லாதீர்கள். இது அனாதைத் திட்டங்களை மாநில அரசு தொடக்க உதவும்.''

இதனிடையில் - பிரம்மரிஷி விஸ்வாமித்ரர் படத்தில் விஸ்வாமித்ரராக ஆந்திர மாநில முதல் அமைச்சர் என். டி. ராமராவ் நடிப்பதற்குத் தடை விதிக்கக்கோரும் ரிட் மனு மீதான விசாரணையை மாநில உயர் நீதிமன்றம் கடந்த திங்கள் ஆரம்பித்தது. (எ)

## கி. ஜேர்மனியில் தூதரகத்தை மூடிவிட மே. ஜேர்மனி முடிவு

பொன் ஆக. 18
கிழக்கு ஜேர்மனியில் உள்ள தனது தூதரகத்தை மூடிவிடுவது என்று மேற்கு ஜேர்மனி அரசு தீர்மானித்துள்ளது.

தனது தூதரகத்தில் தஞ்சமடைந்து அரசியல் புகலிடம் கோரும் கிழக்கு ஜேர்மன் பிரசைகள் எண்ணிக்கை அதிகரித்துவருவதால் இந்த முடிவு செய்யப்பட்டதாக பொன் அரசு அறிவித்துள்ளது.

கடந்த வாரம் மட்டும் 180 கிழக்கு ஜேர்மன் பிரசைகள் அரசியல் தஞ்சம் கோரியதாக மேற்கு ஜேர்மன் அரசு அறிவித்துள்ளது. (எ)

## கூட்டத் தொடர் நீடிப்பு

புதுடில்லி, ஆகஸ்ட் 13
புதுடில்லி லோகசபையின் கூட்டத் தொடர் வருகிற 18 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டு உள்ளது.

இலங்கைப் பிரச்சினை உட்பட பல முக்கிய பிரச்சினைகளை விவாதிப்பதற்காகவே கூட்டத் தொடர் நீடிக்கப்படுவதாக நேற்று அறிவிக்கப்பட்டது. (இ-எ)

## நியூசிலந்தில் புதிய பிரதமர்

வெலிங்டன், ஆக 13
நியூசிலந்தின் பிரதமராக திரு. ஜெப்ரி பால்மர் தெரிவு செய்யப்பட்டார்.

பதவியை இராஜினாமச் செய்த திரு. டேவிட் லாங்கேயின் அமைச்சரவையில் இவர் பிரதிப் பிரதமராகப் பணிபுரிந்து வந்தார்.

புதிய பிரதமர் பதவிப் பிரமாணம் செய்து கொண்டார்.

அத பின்னர் அவர் செய்தியாளர் மத்தியில் பேசுகையில்,

லாங்கே அரசு கடைப்பிடித்து வந்த அணு ஆயுதம் பற்றிய கொள்கையையே நானும் பின்பற்றுவேன்' — என்று தெரிவித்தார்.

செல்வி எலன் கார்க் பிரதிப் பிரதமராக தெரிவு செய்யப்பட்டார். இவர் முன்னர் சுகாதார அமைச்சராக பணி புரிந்தார். (எ)

ஆசிரிய தெரிவுப் பரீட்சைக்குரிய
பொது அறிவு, பொதுஉளச்சார்பு
நூல் விற்பனையாகிறது.
க. குணராசா M. A.

ஸ்ரீலங்கா புத்தகசாலை, மக்மில்லன் புத்தகசாலை — யாழ்ப்பாணம்
துர்க்கா ஸ்ரேஷனர்ஸ் — சுன்னாகம்
கவிதா புத்தகசாலை — வவுனியா
புதிய உயர் கல்லூரி — ஆரியகுளம் சந்தி யாழ்ப்பாணம்.

(இ/3289)

## 27 ஆண்டுகள் ஒரே இடத்தில் அமர்ந்து சாதனை

பவநகர். ஆக. 13
ஒரே இடத்தில் 27 ஆண்டுகளாக ஆடாமல், அசையாமல், மௌனமாக இருந்து உலக சாதனை புரிந்த ஒருவர் அண்மையில் காலமானார்.

அப்போது அவருக்கு வயது 90. குஜராத் மாநிலத்தில் சிட்ரா கிராமத்தில் வசித்து வந்த அவரது பெயர் மஸ்த்ராம் பாபு.

அவரது சாதனை உலக கின்னஸ் புத்தகத்திலும் இடம் பெற்றுவிட்டது. (எ-4)

## லெபனான் மோதலில் 45 பேர் பலி

பேரூட் ஆக, 13
லெபனான் தலைநகர் பேரூட் நேற்று கடும் ஷெல் தாக்குதலுக்கு இலக்கானது.

சுமார் 45 பேர் அப்போது உயிரிழந்தனர் லெபனான் படைகளும் சிரிய ஆதரவிலான கெரில்லாக்களும் ஈடுபட்டனர்.

மோசமடைந்து வரும் லெபனான் நிலைமை குறித்து ஐநா பொதுச் செயலாளர் ஆழ்ந்த கவலை தெரிவித்தார். (எ)

மொழிப்போராட்டத்தில்

## வீழ்வது நாம்; வாழ்வது தமிழே! முதலமைச்சர் கருணநிதி முழக்கம்

சென்னை, ஆக. 13
கவிஞர் வைரமுத்து எழுதிய 'எல்லா நதியிலும் என் ஓடம்' என்ற கவிதை நூலை முதலமைச்சர் கருணநிதி கடந்த திங்கள் சென்னையில் வெளியிட்டு வைத்தார்.

பிரபல எழுத்தாளர் சாவி விழாவிற்குத் தலைமை வகித்தார்.

பட அதிபர் ஏவி. எம். சரவணன், டைரக்டர் பாரதிராஜா ஆகியோர் முதற் பிரதிகளை வாங்கினர்.

பின்னர் முதலமைச்சர் கருணநிதி பேசியதாவது:

'நான் தமிழை நேசிக்கிறேன். தமிழ்மொழி நாளைக்குச் சாகும் நிலை ஏற்பட்டால் இன்றே நான் உயிர்விட்டு தமிழைக் காப்பேன்!—என்று கவிஞர் வைரமுத்து சொன்னார்.

அது தமிழின்பால் இருக்கிற ஆவத்தைக் காட்டுகிறது.

இக்கருத்தை நான் முன்னரே கூறிவிட்டேன்.

மொழிப் போராட்டத்தில் வீழ்வது நாமாக இருப்பினும் வாழ்வது தமிழாக இருக்க வேண்டும் என்று எழுதினேன். அதையே இன்றும் கூறுகின்றேன்.

வைரமுத்துவின் நூலில் உள்ள உலக கவிஞர்களின் கவிதைகள் எல்லாம் பாரதியார், பாரதிதாசன் கவிதைகளை மிஞ்சிவிடவில்லை.

புதிய கவிதைகளை எத்தனையோ ஆண்டுகளுக்கு முன்னர் பாரதியார் எழுதி இருக்கிறார்.

அந்த பாரதியாரை இதில் எடுத்தாளப்பட்ட எந்த கவிஞரும் மிஞ்சிவிட்டார்களா என்றால் இல்லை; மிஞ்சிவிட்டதாக ஏற்றுக் கொள்ள நான் தயாராக இல்லை.

இப்படி கலைஞர் தெரிவித்தார். (எ)



கலைஞர் கருணநிதி

# 2,000ஆவது ஆண்டில்2கோடி பேருக்கு'எய்ட்ஸ்' உலகசுகாதார ஸ்தாபனம்எச்சரிக்கை

இந்தநூற்றாண்டின் கடைசி வாக்கில் அதாவது இன்னும் சுமார் 11 ஆண்டுகளில் உலகம் முழுவதிலும் சுமார் 2 கோடி மக்கள் எய்ட்ஸ் (Aids) நோயினால் பாதிக்கப்பட்டவர்களாக இருப்பர்.

அத்துடன் 50 லட்சம் பேர் அந்த நோயினால் மடிந்து போவர் அல்லது மடிந்து கொண்டிருப்பர் என்று சர்வதேச நிபுணர்கள் குழு ஒன்று கருத்து கூறியுள்ளது.

அவர்களது இக்கணிப்பு ஜெனிவாவில் உலக சுகாதார ஸ்தாபனத்தின் அறிக்கையில் இடம் பெற்றுள்ளது.

உலகில் எய்ட்ஸ் நோய் தலை தூக்கியதிலிருந்து வெளியிடப்பட்ட மிக பயங்கரமான கணிப்பு இதுவேயாகும்.

**பல நாடுகளில் ஆய்வு**

ஏனெனில் இப்போது இந் நோயினால் பாதிக்கப்பட்டவர்களும், இந்நோயின் வைரஸை உடலில் பெற்று இந்நோய்க்குப் பலியாகக் கூடியவர்களாகவும் உள்ளவர்களின் எண்ணிக்கை அடுத்த சுமார் 10 ஆண்டுகளில் 4 மடங்காக உயரும் என்பதை இக் கணிப்பு காட்டுகிறது.

விஞ்ஞானிகள் பலரும் சுமார் 150 நாடுகளில் எய்ட்ஸ் நோய் பரவியுள்ள பாணியைப் பலமாத காலமாக ஆராய்ந்து மேற்படி கருத்தை வெளியிட்டுள்ளனர்.

எய்ட்ஸ் நோயானது (Human Immuno Deficiency Virus) எனபபடுகிற வைரசினால் ஏற்படுகிறது.

இந் வைரஸ் சுருக்கமாக HIV வைரஸ் என்று குறிப்பிடப்படுகிறது. மனித உடலில் நோய்களை எதிர்க்கும் திறன் இயல்பாக உள்ளது. மேற்கூறிய வைரஸ் காரணமாக எய்ட்ஸ்நோய் ஏற்படும் போது உடலில் நோய் எதிர்ப்பு ஆற்றல் இல்லாதுபோய் விடும்.

எய்ட்ஸ் நோயை உண்டாக்கும் வைரஸ் செயல்படாது செய்வதற்கான மருந்தைக் கண்டுபிடிக்கத் தற்போது உலகம் முழுவதிலும் மும்முரமாக ஆராய்ச்சி நடந்து வருகிறது.

உலகில் மேற்படி வைரஸைப் பெற்றிருப்பவர்களின் எண்ணிக்கை 50லட்சம் முதல் ஒரு கோடியாக இருக்கலாம் என்றும் 1991ஆம் ஆண்டு வாக்கில்உலகம் முழுவதிலும் சுமார் 10லட்சம் பேர் இந் நோயினால் பிடிக்கப்பட்டவர்களாக இருப்பர் என்றும் உலக சுகாதார ஸ்தாபனம் (WHO) இதுவரை கருதி வந்தது

**தலை விரித்தாடும்**

ஆனால் இந்த ஸ்தாபனத்தின் ஆதரவிலான புதிய கணிப்புகளோ, அடுத்த சுமார் 5 ஆண்டுகளில் இந்நோய் குறிப்பாக அமெரிக்க, ஆபிரிக்கா, ஆசியா, கரீபியன், தென் அமெரிக்கா ஆகிய பிராந்தியங்களில் தலைவிரித் தாடலாம் என்று காட்டுகின்றன.

எனினும் இப்போது உலகம் முழுவதும் சுமார் ஒன்றரை லட்சம் பேர் மட்டுமே எய்ட்ஸ் நோயினால் பீடிக்கப்பட்டுள்ளதாக அதிகாரபூர்வ கணக்குகள் கூறுகின்றன.

இதில் அமெரிக்காவில் உள்ள சுமார் 90 எய்ட்ஸ் நோயாளிகளும் அடங்குவர்.

ஆனால் அதிகார பூர்வ கணக்குகள் உண்மையில் உள்ள நிலையை பெரிதும் குறைத்துக் காட்டுவதாக நிபுணர்கள் கருதுகின்றனர்.

எய்ட்ஸ் உள்ளதா என்று சோதித்துக் கண்டறிவதில் உள்ள குறைபாடு எய்ட்ஸ் நோய் கண்டவர்கள் அது பற்றித் தகவல் தெரிவிக்கத் தயக்கம் காட்டுவதும் இதற்கான காரணங்களாகும்.

குறிப்பாக சில ஆபிரிக்க நாடுகளில் இவ்வித நிலைமை உள்ளது.

எய்ட்ஸ் நோய் வராமல் தடுப்பதற்கு உலகம் முழுவதிலும் தீவிர முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ள போதிலும், இந்நோய் பரவுவது 1990 ஆம் ஆண்டுகளின் பிற்பகுதி வரையில குறிப்பிடத்தக்க அளவுக்குக் குறையாது. என்று உலக சுகாதார ஸ்தாபனத்தின் ஆராய்ச்சிக் குழுவினர் கூறுகின்றனர்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

**இயங்கம்வேர் தைலம்**
இத்தைலம் தேகத்தில் உண்டாகும் சகல விதமான சொறி, கரப்பன், சிரங்கு, புண், கடி, குஸ்டம், கிரந்தி, சூலை வண்டுகடி, சில விசம் முதலிய வியாதிகளுக்குப் பூரிவரக் குணமாகும்.
2 அவு: போத்தல் விலை 10/-
கிடைக்குமிடம்:
க. செ. கைலாசம்பிள்ளை அன் சன்ஸ்
மருந்துக்கடை
76, பெரியகடை, யாழ்ப்பாணம்.

# உதயன்

14 08 1989 திங்கட்கிழமை

**வேல்படை மருந்து**
இப்படை மருந்து தேமல், கக்கூஸ்பற்று, சொறி, சிரங்கு, கரப்பன், பூச்சிக்கடி, முதலிய சகல ரோணங்களையும் குணமாக்கும்.
1 பெரிய டப்பி 12/-
1 சின்ன டப்பி 6/50
கிடைக்குமிடம்:
க. செ. கைலாசம்பிள்ளை & சன்ஸ்
மருந்துக்கடை
(5) 76, பெரியகடை, யாழ்ப்பாணம்.

# பனை அபிவிருத்திச் சபைக்கு
# ரூபா 80 லட்சம் ஒதுக்கீடு!

## சபையின் தலைவர் தகவல்

கொழும்பு, ஆக 14
இலங்கைப் பனை அபிவிருத்திச் சபைக்கு நடப்பு வருட நிதியாக 80 லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.
பனை அபிவிருத்திச் சபைத் தலைவர் திரு. கே. நடராசா இத்தகவலை உதயனுக்குத் தெரிவித்தார்.
சபை ஆரம்பிக்கப்பட்ட காலகட்டத்தில் 20 லட்சம் ரூபாவே ஒதுக்கப்பட்டது. பின்னர் அத் தொகை 40லட்சமாக அதிகரிக்கப்பட்டது.
பனை அபிவிருத்திச் சபை பெருந்தோட்ட தொழிற்துறை அமைச்சின் கீழ் கொண்டுவரப்பட்டதை அடுத்தே இந் நிதி அதிகரிப்பு செய்யப்பட்டதாகத் திரு. நடராசா சொன்னார்.
இந் நிதி அதிகரிப்பின் மூலம் சபையின் அபிவிருத்தி நடவடிக்கைகள் விரிவு படுத்தப் பட இருப்பதாகவும் அவர் கூறினார். (ஓ-13)

## சூட்டுக்குப் பலி

மாங்குளம், ஆக. 14
தவறுதலாக இடம்பெற்றதாகக் கூறப்படும் இராணுவ துப்பாக்கிச் சூட்டுக்கு நீராவிப்பிட்டி வாசிஒருவர் இறந்தார்.
இறந்தவர் இப்ருகீம்-அலீஸ் என்பவர். (இ- 94)

# குரங்கின் கைப்பட்ட தேன்கூடு குலைந்து...!

வட்டக்கச்சி, ஆக. 14
ஒரு பொருளின் அருமை தெரியாதவர்கள் கைக்குப் போய்ச் சேர்ந்தால் குரங்கின் கைப் பூமாலை என்று சொல்வதுண்டு.
குரங்கின் கையில் தேன்கூடு அகப்பட்டால் எப்படியிருக்கும்?
வட்டக்கச்சி கில்வா வீதியில் உள்ள நாகதம்பிரான் ஆலய வளவில் ஓர் அரச மரம். அந்த அரச மரத்தில் பென்னம் பெரிய தேன் கூடு. அங்குவந்த குரங்குஒன்றுதேன் கூட்டைக்கண்டதும் அதன் மீது பாய்ந்து பிய்த்து எறிந்தது! தேன்கூட்டிலிருந்த தேனீக்கள் குரங்கை மொய்த்துக் குத்தின. அது ஒரு மாதிரி மரத்துக்கு மரம் தாவிப் பாய்ந்து மறைந்துவிட்டது!
தங்கள் கூடு குலைந்ததால் ஆத்திரமடைந்த தேனீக்களுக்குச் சினம் தணியவில்லை, ஒரே கூட்டமாகப் படையெடுத்து ஆலயத்துக்கு அருகில் உள்ளவர்களைப் பதம் பார்த்தன!
தேனீக்கள் தாக்கியதில் கடுமையாகப் பாதிக்கப்பட்ட ஒரு வயோதிபரும், ஒரு குடும்பப் பெண்ணும் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.
அரைகுறையாகத் தொங்கிக்கொண்டிருக்கும் தேன் கூட்டை வீழ்த்தி, அதனைக் கொழுத்துவதற்கு கிராம அபிவிருத்திச் சங்கத்தினர் நடவடிக்கை எடுத்துள்ளனர். (அ-163)

# நாளை மடு நகரிலிருந்து

குருநகர், ஆகஸ்ட் 14
வரலாற்றுப் புகழ்மிக்க மடு மாதா ஆலய வருடாந்த விண்ணேற்பு சிறப்புத் திருவிழா நாளை செவ்வாய்க்கிழமை மிகச் சிறப்பாக மருதமடுத் திருப்பதியில் கொண்டாடப் படுகிறது.
இன்று காலை 7 மணிக்கு திருநாள் பாடல், கூட்டுத் திருப்பலி ஒப்புக்கொடுக்கப் படும். 8.30 மணிக்கு மரியன்னை திருச் சொருப ஊர்வலம் ஆரம்பமாகும்.
யாழ்ப்பாணத்திலிருந்து மடு யாத்திரிகர்கள் செல்வதற்கு வசதியாக தினமும் யாழ்-பஸ் நிலையத்தில் இருந்து மடுவுக்கு விசேட பஸ் சேவையை வட பிராந்திய போக்குவரத்துச் சபை நடத்தி வருகிறது. (அ-51)

# உற்சவம்: விசேட பஸ்

## மிருதங்க,...

யோர் மங்கள விளக்கேற்றி விழாவை ஆரம்பித்து வைப்பார்கள்.
திரு. ஏ. கே. கருணாகரன் ஆரம்ப உரையையும், திருமதி ஞானம்பிகை பத்மசிகாமணி வரவேற்புரையையும் நிகழ்த்துவார்கள்.
பேராசிரியர்கள் ந. பாலகிருஷ்ணன், வி. சிவசாமி மற்றும் திரு. எம். என். செல்லத்துரை, திரு. எஸ். கணபதிப்பிள்ளை ஆகியோர் வாழ்த்துரை வழங்குவர்.
திரு. ப. கோபாலகிருஷ்ணன் அறிமுக உரையை நிகழ்த்த பேராசிரியர் அ. துரைராஜா நூலை வெளியிட்டு வைத்து உரையாற்றுவார்.

புதையுண்ட நிலையில் மீட்கப்பட்ட

# குடும்பப் பெண்ணின் சடலம் கிளிநொச்சியில் தகனம்!

வட்டக்கட்சி, ஆக. 14
கிளிநொச்சி குளம் வைரவர் கோவிலடியில் புதைக்கப்பட்ட நிலையில் மீட்கப்பட்ட குடும்பப் பெண்ணின் சடலம் அதே இடத்தில் எரிக்கப்பட்டது.
வன்னேரிக்குளத்தைச் சேர்ந்த உ. இராஜேஸ்வரி (வயது 37) என்ற குடும்பப் பெண்ணின் சடலமே அது என அடையாளம் காணப்பட்டது.
இப்பெண் ஐந்து குழந்தைகளின் தாய் ஆவார்.
கிளிநொச்சி மருதநகர் வெட்டுக்காடு என்ற இடத்தில் கடந்த சனிக்கிழமை துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் மர்மமான முறையில் இப்பெண் இறந்து கிடக்கக் காணப்பட்டார்.
பற்றை மறைவில் கிடந்த இந்தச் சடலத்தில் உடை ஏதும் இருக்கவில்லை. ஒரு கையில் சதை பிய்ந்திருந்தது.
கடந்த வெள்ளிக்கிழமை அளவில் உயிரிழந்ததாகக் கருதப்படும் இப்பெண்ணின் சடலத்தைசனிக்கிழமையன்று பொதுமக்கள் கண்டனர் என்று கூறப்படுகிறது.
பின்னர் மர்மமான முறையில் இச்சடலம் இடம் மாறியதாகக் கூறப்படுகிறது.
இனம் தெரியாதவர்களால் கிளிநொச்சி வைரவர் கோயிலடியில் புதைக்கப்பட்டிருந்த இந்தச் சடலம், கிளிநொச்சி கிராமசேவையாளரின் ஏற்பாட்டில், பொதுமக்களின் உதவியுடன் தோண்டி வெளியே எடுக்கப்பட்டது.
சடலத்தைக் கிளிநொச்சி ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்ல முயற்சி எடுக்கப்பட்டதாயினும், பின்னர் அது அந்த இடத்திலேயே எரிக்கப்பட்டதாகத் தெரிய வந்தது. (உ-163)

# பண்டத்தரிப்பு பகுதியில் இருவர் சுட்டுக்கொலை

பண்டத்தரிப்பு, ஆக 14
பண்டத்தரிப்பு, பகுதியில் நேற்று முன்தினம் சனிக்கிழமை இருவர் சுட்டுக்கொல்லப்பட்டனர்.
இளவாலையில் ஒருவரின் சடலமும் வினாவெளி மயானத்துக்குச் செல்லும் பாதையில் மற்றொரு சடலமும் கிடக்கக் கண்டுபிடிக்கப்பட்டது.
சில்லாலையில் கொலையுண்டு கிடந்தவர் சுழிபுரம் வாசியான இராசதுரை சபாநாதன் (வயது 61) என அடையாளம் காணப்பட்டார்.
மற்றையவர் 25 வயது மதிக்கத்தக்க இளைஞர் என்று தெரிவிக்கப்பட்டது.
அவரது பெயர் விவரம் கிடைக்கவில்லை. (ஓ-120-10)

## அடையாளம் காணப்பட்டார்

யாழ்ப்பாணம், ஆக 14
நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் கோயில் வீதியில் சுட்டுக்கொல்லப்பட்டவர் கிளிநொச்சிஸ்கந்தபுரத்தைச் சேர்ந்த பி. சுந்தரதாஸ் (வயது 22) என அடையாளம் காணப்பட்டார்.
இவரது மரணம் தொடர்பாக விசாரணை நேற்று யாழ் ஆஸ்பத்திரி பொலீஸ் பிரிவில் நடைபெற்றது. (ஓ-10)

# தென்பகுதிச் சம்பவங்கள்

கொழும்பு, ஆக 14
தென்பகுதியில் இடம் பெற்ற சம்பவங்களின் தொகுப்பு வருமாறு:-
நாரஹன்பிட்டியில் வாகனம் ஒன்றின் மீது பாதுகாப்புப் படையினர் நடத்திய துப்பாக்கிப் பிரயோகத்தில் வாகனத்தில் இருந்த 2 பேர் கொல்லப்பட்டனர். இடையில் அகப்பட்டுக்கொண்ட பாதசாரி ஒருவர் காயமடைந்தார்.
இந்த வாகனம் கடத்தப்பட்ட ஒன்று என்று பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.
★ கேகாலையில் பாதுகாப்புப்படையினர் நடத்திய தேடுதலின் போது தீவிரவாதிகளின் மறைவிடம் ஒன்று முற்றுகையிடப்பட்டது.
★ காலியில் ரோந்து சென்ற பொலீஸ் ஜீப் ஒன்றின் மீது தீவிரவாதிகள் மறைந்து இருந்து நடத்திய தாக்குதலில் பொலீஸ் இன்ஸ்பெக்டர் ஒருவரும் 2 கான்ஸ்டபிள்களும் கொல்லப்பட்டனர்.
★ நுவரெலியா மாவட்டத்தில் பாடசாலை அதிபர் ஜோதிரத்தின என்பவரும் ஆசிரியர் ஒருவரும் இனந் தெரியாதவர்களால் சுட்டுக் கொல்லப்பட்டனர்.
★ கண்டியில் பத்திரிகை விற்பனை நிலையம் ஒன்றின் மீது குண்டுவீசப்பட்டது. அதில் ஆறுபேர் காயமடைந்தனர். (உ-எ)

## இந்தியப்படை......

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)
சூழ்நிலையில் இந்திய-இலங்கை ஒப்பந்தத்தைச் செய்துகொள்வதே சிறந்த வழியாக இருந்தது — என்று தெரிவித்தார்.
இதேவேளை நேற்றுகொழும்பில் வெளியான "சண்டே டைம்ஸ்" பத்திரிகைக்கு அளித்த பேட்டி ஒன்றில திரு. ஜெயவர்த்தன கூறியிருப்பதாவது:-
இனப் பிரச்சினைக்குத் தானே தீர்வு காண முடியும் என்று இலங்கை அரசு கருதும் பட்சத்தில் இந்தியத் துருப்புக்கள் இங்கிருந்து விலகிச் செல்லவேண்டும்.
இலங்கை அரசு வடமராட்சித் தாக்குதலை நடத்திய போது அப்போது இந்தியத் தூதராகக் கடமையாற்றிய திரு. டிக்ஸிற் "இலங்கைப் படைகள் யாழ்ப்பாணத்தைத் தங்கள் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வருவதை இந்தியா ஒருபோதும் அனுமதிக்காது" என்று அமைச்சர் அத்துலத் முதலிக்குக் கூறியிருந்தார்.
வட பகுதியில் தீவிரவாதிகளுக்கு எதிரான நடவடிக்கைகளைக் குறைத்துக்கொள்ளும்படி இலங்கை அரசு மீது இந்தியா வற்புறுத்தல்களை மேற்கொண்டது — என்றார். (உ-எ)

## 238 பேருக்கு...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)
அதிபர் பிரிவில் தெரிவானவர்களுக்கு பரந்தன் மகாவித்தியாலயத்தில் 17ஆம் திகதி முதல் 22ஆம் திகதி வரையும்-
பூநகரி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் தெரிவானவர்களுக்கு பூநகரி மகாவித்தியாலயத்தில், 17ஆம், 18ஆம் திகதிகளிலும்-
பளை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் தெரிவானவர்வர்களுக்கு பளை மகாவித்தியாலயத்தில் 17ஆம், 18ஆம் திகதிகளிலும் நேர்முகப் பரீட்சைகள் நடைபெறவிருக்கின்றன
போட்டிப் பரீட்சைகள் எதிர்வரும் 26ஆம் திகதி கிளிநொச்சி மகாவித்தியாலயம், பூநகரி மகாவித்தியாலயம், பளை மகாவித்தியாலயம் ஆகியவற்றில் நடைபெறும். (உ-3)

## சீமெந்து இறக்குமதி

இலங்கை சிமெந்துக்கூட்டுத் தாபனமும், 'லங்கா சிமெந்து' லிமிடெட் நிறுவனமும் வெளிநாட்டிலிருந்து சிமேந்தை இறக்குமதி செய்ய நடவடிக்கைகளைமேற்கொண்டுள்ளன.
உள்ளூரில் சிமெந்து தட்டுப்பாட்டை நீக்கவும், விலை அதிகரிப்பை கட்டுப்படுத்தவுமே இறக்குமதிக்கு ஏற்பாடுகள் செய்யப்படுவதாக அறிவிக்கப் படுகிறது. (அ-9)
(மற்றொரு செய்தி 4 ஆம் பக்கத்தில்)

# அளவெட்டி நாகேஸ்வரம் கொடி நாளை

யாழ்ப்பாணம், ஆகஸ்ட் 14
அளவெட்டி, நாகேஸ்வரம் ஸ்ரீ நாகவரத நாராயணர் தேவஸ்தான வருடாந்த மகோற்சவம் நாளை செவ்வாய்க்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.
எதிர்வரும் 25 ஆம் திகதி வெள்ளிக்கிழமை தீர்த்தோற்சவம் நடைபெறும். [ஓ]

## இருநாடுகளுக்கும்.....

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)
இந்தியாவுடன் மோதாமல் அமைதிப்படை விலகல் விவகாரத்துக்கு தீர்வுகாண வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளனர். இது மிகவும் ஆரோக்கியமான சூழ்நிலையே.
விரைவில் அடுத்த கட்ட இலங்கை — இந்திய பேச்சுவார்த்தைகள் நடைபெறக் கூடிய சூழ்நிலை தோன்றியுள்ளது.
இப்பிரச்சினையில் கூடுதலான அக்கறை கொண்டவன் என்ற முறையில் சுமுக தீர்வுக்கான சூழ்நிலை ஏற்பட்டு இருப்பதை நான் கூறக்கூடியதாக இருக்கிறது.
— இப்படி அமைச்சர் தொண்டமான் சொன்னார். (உ-எ)

## புதுடில்லி.....

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)
புதுடில்லி யோசனைகள்பற்றி முடிவு எடுக்கப்படும்போது இலங்கையின் நிலைபற்றி மட்டுமே ஜனாதிபதி பிரேமதாச முக்கியத்துவம் கொடுக்க வேண்டும் என்று இளம் அமைச்சர்கள் சிலர் அமைச்சரவைக் கூட்டத்தில் கருத்து வெளியிட்டனர்.
இந்தியாவின் நிலைக்கு முக்கியத்துவம் கொடுக்கக்கூடாது என்றும் இந்த அமைச்சர்கள் ஜனாதிபதியைக் கேட்டிருந்தனர். (உ-ஒ-எ)

# மரண அறிவித்தல்

## திருமதி சின்னத்தங்கம்

காலஞ்சென்ற யோசெவ் (நவம்) அவர்களின் அன்பு மனைவி சின்னத்தங்கம் காலமாகிவிட்டார். இவர் யோசெப் அன்ரனி (வவி), செபமாலை, சகாயராசா ஆகியோரின் அன்புத் தாயாரும் சுப்பு, வைத்திலிங்கம், இராசமணி ஆகியோரின் மாமியாரும் கதிரவேலு, கந்தையா ஆகியோரின் சகோதரியும் பிள்ளையம்மாவின் மைத்துனியும் தேவன், காலஞ்சென்ற சூரியன், சந்திரா, சாந்தி, சாரதா, குமார், குயிந்தன், விஜியா, லதா, ஜெகன், கோமதி, சுமா, சுமன் ஆகியோரின் பேத்தியும் ஆவார். அன்னாரின் பூதவுடல் 143/1, ஆஸ்பத்திரி வீதி, இல்லத்திலிருந்து நாளை 14-8-89 அன்று மாலை நான்கு மணிக்கு நல்லடக்கத்துக்காக கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.
இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
லிங்கம் அந்தியகால சேவை உரிமையாளர்
S. வைத்திலிங்கம் (மருமகன்)
(1521)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி மோகனரத்தினம் வல்லிபுரம்

சரசாலை தெற்கை பிறப்பிடமாகக் கொண்ட திருமதி மோகனரத்தினம் வல்லிபுரம் 13-08-1989 இல் சிவபதம் எய்தினார்.
இவர் காலஞ்சென்ற எஸ். வல்லிபுரத்தின் (இளைப்பாறிய தபால் அதிபர்) அன்பு மனைவியும், சற்குணநந்த சோதியின் (தபால் அதிபர்: கிளிநொச்சி) அருமைத் தாயாரும், காலஞ்சென்ற திருமதி சிவஞானம் பொன்னுச்சாமியின் சகோதரியும், சண்முகரத்தினராசா (கடதாசிக் கூட்டுத்தாபனம், கொழும்பு), புவனசுந்தரேஸ்வரி, ஞானசுந்தரேஸ்வரி (ஆசிரியை) ஆகியோரின் பெரிய தாயாருமாவார். திரு. சிவசேகரம் (C. T. B., கோண்டாவில்), திருமதிகள் சோதிப்பிள்ளை, பரமேஸ்வரி (ஆசிரியை, மகாஜனக் கல்லூரி), நடராசா, கருணாகரன் சிவராசா ஆகியோரின் மாமியாரும், மயூரனன, யாழினி, ஜெயந்தினி, பொன்சபேசன், மாதுமையாள், கார்த்திகாயனி, யோகவாணி ஆகியோரின் அன்புப் பேத்தியுமாவார்.
அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று 14-08-1989 திங்கட்கிழமை காலை 10-00 மணியளவில் கோண்டாவிலில் நடைபெறும்.

ஸ்ரேசன் வீதி,
கோண்டாவில் மேற்கு,
கோண்டாவில்.

தகவல்:
V. S. சோதி
(மகன்)
[1494]

## திருமதி இமல்டா பொன்ரேஸ் டோமினிக்

ஈச்சமோட்டை வீதியைச் சேர்ந்த திருமதி இமல்டா பொன்ரேஸ் டோமினிக் காலமானார். இவர் எஸ். எம். டோமினிக்கின் (கிராம சேவையாளர் கொழும்புத்துறை) அன்பு மனைவியும் ஜெயரஞ்சன் (ஜேர்மனி), ஜெயராஜன் (பிரான்ஸ்), ஜெயலக்ஸ்மன் (கனடா), பூவியாழ் ஜெயரேணுகா (சுண்டிக்குழி மகளிர் பாடசாலை), ஜெயமனோகரன் ஆகியோரின் அன்புத்தாயாரும், ராஜன், ஜொய்சியின் அன்பு மாமியாரும் ஆவார். அன்னாரது பூதவுடல் 32, ஈச்சமோட்டை வீதியிலுள்ள இல்லத்தில் இருந்து நல்லடக்கத்திற்காக இன்று (14-8-89) பிற்பகல் 4.00 மணியளவில் பரிசுத்த கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளும்படி வேண்டிக்கொள்கின்றேன்.

தகவல்:
S. M டோமினிக்.

32, ஈச்சமோட்டை வீதி,
யாழ்ப்பாணம்.
(1517)

## திருமதி சோமசுந்தரம் கனகம்மா

கரம்பொன் கிழக்கு, ஆஸ்பத்திரி வீதியைச் சேர்ந்த திருமதி சோமசுந்தரம் கனகம்மா 12-8-89 சனிக்கிழமை இரவு இறைவனடி எய்திவிட்டார்.
அன்னார் அமரர் மாரிமுத்து சோமசுந்தரத்தின் அன்பு மனைவியும், அமரர் நாகமணி சிவக்கொழுந்து அவர்களின் சிரேஷ்ட புதல்வியும், அமரர் மாரிமுத்து நாகம்மா அவர்களின் அன்பு மருமகளும், கெங்காதரம், கௌரிநாயகி, மகாலிங்கம் (ஐலண்ட் வேக்ஸ் சொப், சுண்டுக்குளி), கமலாம்பிகை ஆகியோரின் அன்புத் தாயாரும், க. நாகராசா [வண்ணார்பண்ணை], நகுலாம்பாள், சந்திரசேகரம் (பிரான்ஸ்), விஜயலெட்சுமி (திருநெல்வேலி) ஆகியோரின் அன்பு மாமியாரும், கணபதிப்பிள்ளை (பஞ்சாட்சரம்), சுந்தரம் வள்ளியம்மை, நடராசா [சாயி ரவல்ஸ், யாழ்ப்பாணம்] ஆகியோரின் அன்புச் சகோதரியும், திருநாவுக்கரசு, சுப்பிரமணியம், பாக்கியம் தருமலிங்கம், மனோன்மணி இராசலிங்கம், நாகம்மா கணபதிப்பிள்ளை, தர்மபூபதி நடராசா ஆகியோரின் அன்பு மைத்துனியும், தர்மலிங்கம் [ரூபன் வேக்ஸ் சொப், அளவெட்டி], திலகவதி, மன்மதராசா (M. S. இன்டஸ்றீஸ், கோண்டாவில்), பத்மாதேவி, பழனிவேல் (பிரான்ஸ்), சிறீதரன் (ஜேர்மனி), சுபோதினி, சிவந்தினி [சிற்றி மெடிக்கல், யாழ்ப்பாணம்), குமுதினி, ஜெயந்தினி, வினோதினி, றதினி, சுகந்தன், கஜந்தன், சங்கீதா ஆகியோரின் அன்புப் பேத்தியும், இராஜகோபால் [உரிமையாளர் ஐலண்ட் வேக்ஸ் சொப், சுண்டுக்குளி], அவர்களின் பெரிய தாயாரும், தேவராசா [உப அதிபர், யா/சதாசிவ மகா வித்தியாலயம், அனலைதீவு] அவர்களின் அன்பு அத்தையுமாவார்.
அன்னாரின் ஈமக்கிரியை 14-8-89 இன்று திங்கட்கிழமை காலை 10.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கரம்பொன் கோட்டை வாசல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.
இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
குடும்பத்தினர்.

கரம்பொன் கிழக்கு,
ஆஸ்பத்திரி வீதி,
ஊர்காவற்றுறை.
(1493)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப் பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்டினரால் [illegible] 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 14 - 08 - 1989இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.